பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை 31.08.2021 கதிர் 299

### இனிது ரகசியம் அல்ல!

நேற்றுமுன்தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் கூட்டம் நடைபெற்றது. பத்து உறுப்பினர்களில் எண்மர் கலந்து கொண்டனர். சம்பந்தனும், சட்டத்தரணி தவராஜாவும் பங்குபற்றவில்லை.

கூட்டம் எப்படி பக்கம்02 »

# காணாமல்போனமை எப்படி என்பதை ஆராய வேண்டாம் என்கிறார் கோட்டா

## நீதி அமைச்சர் அலி சப்ரி வெளிப்படையாக அறிவிப்பு அதில் குற்றத்தைத் தேடவே கூடாது என்றும் உத்தரவு





(ந.லோகதயாளன்)

கொழும்பு, ஒகஸ்ட் 31

ஒருவர் காணாமல் போயிருந்தால் அவர் என்ன காரணத்திற்காகக் காணமல்போனார் என்பதை விசாரிக்கத் தேவை இல்லை. அது விடயத்தில் குற்றம் ஏதும் நடந்துள்ளதா என்பதையும் பார்க்காதீர்கள். அதை மறந்து விடுங்கள். அவர் ஏன் காணாமல் போனார் என்றும் தேடாதீர்கள். அவர் எந்தப் பக்கம் என்றும் பார்க்காதீர்கள். அவற்றையெல்லாம் விட்டு விட்டு, காணாமல் போனவர் எங்கள் ஸ்ரீலங்கா நாட்டவர் என்ற அடிப்படையில் அதனால் ஏற்பட்ட வலியை உணர்ந்துகொண்டு, உரிய இழப்பீடுகளை வழுங்க வேண்டும் என்பதையே ஜனாதிபதி அமைச்சரவையிலும் வெளியிலும் எங்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி வருகிறார்

– இவ்வாறு பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார் நீதி அமைச்சர் அலி சப்ரி. ☞2

## வடமராட்சியில் 2 வயோதிபர்கள் தொற்றால் சாவு

யாழ்., வடமராட்சியில் நேற்று வயோதிபர்கள் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 89 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை பிரிவில் மருத்துவக் கண்காணிப்பில் இருந்த செம்பியன்பற்று மாமுனையைச்சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## யாழ்.போதனாவில் மூன்று பேர் மரணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றுடன் சிகிச்சை பெற்று வந்த மேலும் மூவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 62 வயதுடைய ஆண் ஒருவரும், மாவிட்டபுரத்தைச் ☞2

## சட்டத்துக்கு முரணாக நீதி அமைச்சர் உண்மையை மறைக்க முயலுகின்றார்

### சீறுகின்றார் சுமந்திரன் எம்.பி.

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.31

காணாமல் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவின் முக்கிய விடயம் – பணி –காணாமல் போனவர்கள் எப்படி காணாமல் போனார்கள் என்பதனை கண்டு பிடிப்பதுதான் எனச் சட்டத்தில் கூறியிருக்க, நீதி அமைச்சரின் கூற்று சட்டத்திற்கே முரணானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

காணாமல் போனோர் சர்வதேச தினத்தை ஒட்டிய ☞10



## 4, 562 பேருக்கு கொரோனா உறுதி

இலங்கையில் நேற்று 4 ஆயிரத்து 562 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் ☞2

## 115 ஆண்கள் உட்பட 216 பேர் ஒரே நாளில் தொற்றால் சாவு

நாட்டில் மேலும் 216 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று அரசதகவல்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவே நாளொன்றில் இதுவரை பதிவான கொரோனா மரணங்களின் அதிகூடிய எண்ணிக்கையாகும்.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 115 ஆண்களும், 101 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் ☞2

## வைத்தியர் ஜயருவன் பண்டாரவுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைப்பு



சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் விசேட வைத்திய நிபுணர் ஜயருவன் பண்டாரவுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

ஊடகசந்திப்பொன்றின்போது ☞10

## அத்தியாவசிய உணவு விநியோகம்: அவசரகால விதிமுறைகள் பிரகடனம்

### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு




அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்குவது தொடர்பான அவசரகால விதிமுறைகள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக ☞2

### இலங்கையில் பலரும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிக்கொண்டிருக்கின்றார்கள்!


### அமெரிக்கத் தூதுவர் கவலையுடன் தெரிவிப்பு



இலங்கையில் பலரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்கள் விடயத்தில் உண்மையான பதிலைத் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். ☞2

## முதலமைச்சர் ஸ்டாலினின் ஆட்சிக்காலம் உலகத் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும்

### விக்னேஸ்வரன் அசைக்க முடியாத நம்பிக்கை



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆட்சிக் காலம் தமிழ் நாட்டின் பொற்காலமாக அமையும் என்பதிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ் நாடு விரைவில் பரிணமிக்கும் என்பதிலும் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. அதேபோல், உலகம் முழுவதிலும் உள்ள ☞10



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடந்தது என்று எண்மரில் ஒருவரைத் துளாவினேன். அவரோ எனக்கு கீதா உபதேசம் செய்தார்.

*"எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கின்றது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"* - என்றார் அவர்.

மற்றவர்களிடம் விசாரித்ததில் அது சரி என்றுதான் தோன்றியது. பெரிய பிய்ச்சல், பிடுங்கல் ஏதும் இல்லாமல் அமைதியாகவும், சுமுகமாகவும் கூட்டம் நன்றாகவே நடந்தது என்றே தெரிகின்றது.

ஒரு வகையில் இந்தக் கூட்டம் சுமந்திரனுக்கு வெற்றிதான். அண்மைக் காலத்தில் தாம் எடுத்த நடவடிக்கைகள், பேச்சுகள் பற்றிய விவரங்களை சுமார் முப்பத்தியைந்து, நாற்பது நிமிட நேரம் அவர் விவரித்தார்.

அவர் பேசி முடித்த கையோடு அந்த நடவடிக்கைகளுக்குத் திருப்தி தெரிவித்தார் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம். அதனை அடுத்து கூட்டத்தின் போக்கு அதே திசைக்குத் திரும்பி விட்டது.

ரெலோவின் முன் முயற்சியில் எடுக்கப்படும் சமரசத் திட்டத்தில் பத்தோடு பதினொராவது கட்சியாக தமிழரசு பங்குபற்றுவது குறித்து சிலர் விசனம் தெரிவித்தனர்.

அதற்குத்தானே முதலில் நான் தமிழரசுத் தலைவராக அந்த முயற்சியை ஆரம்பித்தேன், எல்லோரும் சேர்ந்து குழப்பி விட்டு இப்போது மாற்றிப் பேசுகின்றீர்களே எனக் கட்சித் தலைவர் மாவை சிடுசிடுத்தார்.

*"நீங்கள் எடுத்த முயற்சியை எதிர்க்கவில்லை. ஆனால் அதற்குப் பேரவை அது, இது என்று பெயர் வைத்தமையினால்தான் பிரச்சினை வந்தது."* - என்று மாவைக்குப் பதில் கொடுக்கப்பட்டது.

ரெலோ அழைத்த கூட்டத்துக்கு கட்சி சார்பில் தலைவர் மாவை மட்டும் தனித்துச் செல்வது பற்றியும் மற்றொரு முக்கியஸ்தர் குறை கூறினார். மாவை பதில் ஏதும் சொல்லாமல் பம்மிக் கொண்டார்.

அரசியல் குழுவை அடிக்கடி மெய்நிகர் வழியில் கூட்டி ஆராய முடிவு செய்யப்பட்டது. அப்படிக் கூட்டினால் கருத்து வேற்றுமைகள் களையப்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது. உண்மைதான். அதற்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமே நல்ல உதாரணம்தான்.

இந்த மெய்நிகர் முறையிலேயே கட்சியின் மத்திய குழுவைக் கூட்டலாம் என்று ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது.

ஆனால் மெய்நிகர் முறையில் கூட்டினால் அதில் ஐம்பது மேற்பட்ட உறுப்பினர்கள் தத்தமது இடங்களில் இருந்தபடி பங்குபற்றுவர், கருத்து மோதல்கள் வெடிக்கும், மெய்நிகர் முறைமை என்றமையால் எல்லாம் பதிவு செய்யப்படும், பக்கத்திலிருந்து வேறு ஆள்களும் நடப்பவற்றைப் பார்த்து செவிமடுக்கலாம், பிறகு கட்சியின் உள்விவகாரம் தண்டவாளம் ஏறும், சமூக ஊடகங்களில் காணொலியாக எல்லாம் அம்பலமாகும், பிறகு, மத்திய குழுவைக் கூட்டப்போய் கட்சி சின்னாபின்னமாவதுதான் மிச்சமாகும் என்ற கருத்துச் சுட்டப்பட்டது.

உண்மைதான். இப்போது அரசியல் குழு பத்துப் பேர்தான். அதில் எட்டுப் பேர்தான் ஞாயிறு கூட்டத்தில் பங்குபற்றினர். அந்தப் எட்டுப் பேரும் ஓரளவு கண்ணியமானவர்கள் என்பதால் கூட்டத்தின் அமர்வைப் பதிவு செய்து காணொலியை வெளியில் விட மாட்டார்கள் என்று நம்பப்பட்டது.

ஆனால் தமிழரசு மத்திய குழு கூட்டம் பல சமயங்களில் அப்படி நடப்பதில்லை. எள்ளும் கொள்ளும் வெடிக்கும். அதை மெய்நிகர் முறையில் நடத்தினால் முழுவதுமே சமூக ஊடகங்களில் சற்றுப் பிந்தி செக்கனுச் செக்கன் ஒழுங்காக அஞ்சல் செய்யப்பட்டு, கட்சி சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற நிலைமை உண்டு.

ஆனால் மாற்றுத் திட்டம் ஒன்று பிரேரிக்கப்பட்டது. பிரதேச ரீதியாக இடங்களைப் பிரித்து, பகிர்ந்து, ஒவ்வொரு இடத்திலும் எட்டுப் பத்துப் பேர் ஒன்று கூடி இருக்கத்தக்கதாக மெய்நிகர் முறையில் கூட்டத்தை நடத்தினால், எந்த இடத்திலும் கூட்ட அமர்வு பதிவுசெய்யப்படவோ, பிற ஆள்கள் அவற்றை அருகில் இருந்து பார்க்கவோ வாய்ப்பு வராது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

என்றாலும், தமிழரசு மத்திய குழுவில் வல்லவர்களுக்கு வல்லவர்கள் இருக்கின்றார்கள். இவ்விடயத்தில் அக்கட்சியும், அதன் பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கமும் கொஞ்சம் உஷாராக இருப்பது நல்லது.

– மின்னல்–

## காணாமல்போனமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணாமல்போனோருக்கான சர்வதேச தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டமையை ஒட்டி நேற்றிரவு மெய்நிகர் முறைமையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காணாமல் போனோர் அலுவலகத்தின் புதிய ஆணையாளராக ஓய்வு பெற்ற நீதியரசர் உபாலி அபயரத்ன பதவியேற்ற பின்பு இந்த முதலாவது பகிரங்க கலந்துரையாடல் நேற்று இரவு 7 மணிமுதல் 8 மணிவரை இடம்பெற்றது.

இதில் நீதி அமைச்சர் அலி சப்ரி, நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி வெலேபொட, சுரேன் ராகவன் ஆகியோருடன் ஓர் பௌத்த பிக்குவும் கலந்து கொண்டார். இதில் கலந்துகொண்டே அலி சப்ரி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காணாமல் போனோர் தொடர்பான விடயத்தை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவாக இருக்கிறார். நீதி அமைச்சர் என்ற ரீதியில் நானும் இந்த விடயத்தில் எனது பூரண பங்களிப்பை வழங்கி வருகிறேன். முன்னைய அரசாங்கத்தைப் போலல்லாது காணாமல்போனோர் அலுவலம், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகிய வற்றை நீதி அமைச்சர் என்ற வகையில் நானும் வெளிவிவகார அமைச்சும், கலாநிதி சுரேன் ராகவன் எம்.பியும், காமினி வெலேபொட எம்.பியும் தொடர்சியாகக் கண்காணித்து, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகிறோம்.

காணாமல் போனவர் என்ன காரணத்திற்காகக் காணாமல் போனார் என விசாரிக்கத் தேவை இல்லை என ஜனாதிபதி கூறியுள்ளார்.

காணாமல் போனவர் ஓர் இலங்கை பிரஜை என்பதனை ஏற்று அதனால் அவரின் உறவுகளுக்கு ஏற்பட்டுள்ள வலியைப் புரிந்து கொண்டு, அதிலிருந்து பாடம் படித்து, அது மீள நிகழாமையை நாம் உறுதிப் படுத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவை கூட்டத்தில் எங்களுக்குத் திரும்பத் திரும்ப வலியுறுத்திய விடயம் இவ்விவகாரத்தில் குற்றம் ஒன்று நடந்திருந்தால் அதை மறந்து விடுவோம். யாராவது ஒருவர் காணாமல் போயிருந்தால் அவர் எந்த இனம், என்ன மொழி, எந்தப் பக்கம் என ஆராயத் தேவையில்லை. இலங்கை பிரஜை எனப் பார்ப்போம். அந்த குடும்பங்களின் வலியைப் புரிந்து கொண்டு, நிலையை கருத்தில் கொண்டு, இழப்பீடு கொடுப்போம்.

யுத்தம் முடிவு பெற்று 12 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்னும் காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படாது இருப்பது, எமது நாடு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் முன்செல்லமுடியாமல் இருப்பதற்குக் காரணமாக உள்ளது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என எல்லாத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் எத்தகைய சூழ்நிலையில், எப்படிக் காணாமல் போனார் என்பதைப் பார்ப்பதை விடுத்து, அவர் காணாமல் போனார் என்பதை மட்டும் அடையாளம் கண்டு இழப்பீட்டை செலுத்துவோம். இதேநேரம் காணாமல் போனோருக்காக இழப்பீடு வழங்கினால் அரசு குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் அர்த்தம் இல்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ், நஷ்ட ஈடு மட்டும் வழங்காது, பொது மன்னிப்பு ஒன்றை கேட்பதாலும் வழங்குவதாலுமே இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரமுடியும்.

சர்வதேச ரீதியில் அவ்வாறே இது மாதிரியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு உள்ளது.

இந்தப் பிரச்சினையை இனியும் தொடர முடியாது. முடிவுரை எழுத வேண்டும். -என்றார்.

இந்த விடயம் தொடர்பில் நாடளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் உரையாற்றுகையில் –

1, 000 நாள்களுக்குள் காணாமல் போனோர் தொடர்பான விடயம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென் பதே எனது விருப்பமாக இருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமான நீதியும் இனி அவ்வாறானதொரு நிலை திரும்பவும் ஏற்படாதிருக்க செய்யக்கூடிய அனைத்து வழிகளையும் நோக்கி நாம் செயற்பட்டு வருகிறோம். – என்றார்.

## காணாமல் ஆக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சர்வதேச தினத்தையொட்டி அவர் நேற்று வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்குவது பாதிக்கப்பட்டவர்களை மாத்திரம் அன்றி அவர்களது குடும்பத்தையும் மற்றும் சமூகத்தையும் பாதிப்படையச் செய்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 115 ஆண்கள் உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் ஆண்கள் மூவரும், பெண்கள் இருவரும் என 05 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 21 ஆண்கள், 20 பெண்கள் என 41 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 170 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 91 ஆண்களும், 79 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 991 ஆக அதிகரித்துள்ளது.

## யாழ்.போதனாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும், கொடிகாமத்தைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## 4,562 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 36 ஆயிரத்து 81 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 14 ஆயிரத்து 394 பேர் குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 71 ஆயிரத்து 992 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## அத்தியாவசிய உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அக்கட்டளைச் சட்டத்தின் ii ஆவது பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள், நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை மொத்தமாகப் பதுக்குதல், அதிக விலை அறவிடுவதன் மூலம் நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் சந்தை முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக, அரசின் உத்தரவாத விலைக்கு அல்லது சுங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு நெல், அரிசி, சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை மொத்தமாகக் கொள்வனவு செய்து மக்களுக்கு நியாயமான விலைக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதற்கும், அரச வங்கிகளின் மூலம் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கடன், கடன் பெற்றுக்கொண்டவர்களிடம் இருந்து அறவிடப்படக்கூடிய வகையில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்பு நிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப் பொருள்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக, மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி.நிவுன்ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார். – என்றுள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# லிந்துலை பகுதியில் 121 தொற்றாளர்கள்

லிந்துலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த மூன்று தினங்களுக்குள் 121 கொவிட் வைரஸ் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என லிந்துலைபொதுச்சுகாதார வைத்திய அதிகாரி ஜகத் அபேகுணரத்ன தெரிவித் துள்ளார்.

குறித்தபொதுச்சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 225 பேருக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளிலேயே 121 பேருக்கு கொவிட் வைரஸ் தொற்றுஉறுதிப்படுத்தப்பட் டுள்ளது. அந்தவகையில், டயகம போப்பத்தலாவ, ஹோல்புறூக், மெராயா, இராணிவத்தை உள்ளிட்ட பிரதேசங்களிலேயே தொற்றாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அனைவரும் தனிமைப் படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்

# ரயில்வே ஊழியர்களுக்காக அநுராதபுரம், புத்தளம் பகுதியில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் ஏற்பாடு

ரயில்வே துறையில் கொவிட் - 19 தொற்றுக்குள்ளான ஊழியர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அநுராதபுரம் மற்றும் புத்தளம் ரயில் நிலையங்களில் இரண்டு தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்க இலங்கை ரயில்வேத் திணைக்களம் பரிசீலித்து வருகிறது.

கொழும்பு கோட்டை மற்றும் நாரஹேன்பிட்டி ரயில் நிலையங்களில் ஏற்கனவே தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் ஊழியர்களின் சுகாதார வசதிக்காக இந்த நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

ரயில்வே ஊழியர்கள் கொவிட் - 19 நோயால் பாதிக் கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பாகத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகக் கூறி ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தால் அண்மையில் வேலைநிறுத்தத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் கொழும்பு கோட்டை மற்றும் நாரஹேன்பிட்டி ஆகிய இடங்களில் தற்போதுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு மேலதிகமாக, அநுராதபுரம் மற்றும் புத்தளம் ரயில் நிலையங்களில் மேலும் இரண்டு தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்க அனுமதி வழங்கியுள்ளதாக இலங்கை ரயில்வே பொது முகாமையாளர் தம்மிகா ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

சமீபத்திய தகவல்களின்படி ரயில்வேத் துறையில் 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் கொவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# மேலும் ஒரு தொகுதி பைஸர் தடுப்பூசிகள் நேற்று வந்தன

இலங்கைக்கு மேலும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பைஸர் கொரோனாத் தடுப் பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த தடுப்பூசி தொகுதி நேற்று (திங்கட் கிழமை) காலை கட்டுநாயக்கவிமானநிலையத்தை வந்தடைந்துள்ளன.

அமெரிக்காவிலிருந்து கட்டார் எயார்வேஸ் மூலம் 815 கிலோ எடையுள்ள குறித்த தடுப்பூசிகள் தொகுதி நாட்டை வந்த டைந்துள்ளன.

இதேவேளை இன்று 15 ஆயிரம் ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் மேலும் ஒரு தொகுதி இலங்கைக்கு கொண்டுவரப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித் தார்.

# காணாமலாக்கப்பட்டோரின் சர்வதேச தினம்; வீடுகளில் இருந்தவாறு உறவுகள் போராட்டம்

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் அடையாள கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. நாட்டில் கொரோனாத் தொற்று பரவல் காரணமாக தங்களது வீடுகளிலிருந்தபடியே அடையாள கவன வீர்ப்புப் போராட்டத்தை உறவுகள் முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக நீதிகோரி போராட்டம் நடத்திவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

காணாமல் போனவர்கள் எப்போது திரும்புவார்கள், இந்த விடயத்தில் இலங்கையை நம்பப்போவதில்லை போன்ற வாசகங்களை ஏந்தியே இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

# அரசியல் கைதிகள் விடுதலைமூலம் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தலாம்

## அருட்தந்தை சத்திவேல்



எங்களுடைய பிள்ளைகளோடு இருந்து எங்களை சாக விடுங்கள் என அரசியல் கைதிகளுடைய பெற்றோர்கள் கூறுகின்றனர் என அரசியல் கைதிகளைவிடுதலைசெய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட் தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளுடைய தற்போதைய நிலைவரம் தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

இலங்கையில் கொரோனாத் தொற்றும், மரணங் களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின் றன.

இந்த நிலையில் அரசியல் கைதிகளுடைய பெற்றோர்கள், எங்களுடைய பிள்ளைகளை நீண்ட நாள்களாக காண முடியாமல் இருக்கின்றது.

அவர்களுடைய முகங்களை நாங்கள் பார்ப் போமா? என்று தெரியாமல் இருக்கின்றது எனக் கூறு கின்றனர்.

ஏனெனில், வயது முதிர்ந்த நிலையில் பிள்ளைகளின் கவலையோடு இருப்பவர்கள், கொரோனாத் தொற்றுக் குள்ளாகக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின் றன.

இந்த நிலையில் தான் பெற்றோர் இவ் வாறு கூறுகின்றனர். இந்த ஆதங்கம் அரசாங்கத்துக்கு எட்டப் போவதில்லை. ஏனென்றால் அண்மையிலே ஜனாதிபதி ஒரு குழுவை அமைத்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக ஒரு குழு அமைத்து, அவர்களுடைய ஆலோசனை பெற்று அதன்பின் நிறைவேற்றுவதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

தற்போது ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக் கப்பட இருக்கின்றது. அவர்களை ஏமாற்றுவதற்காக தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

எனவே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுகின்ற அதேநேரம், தற்போது இருக்கின்ற சூழ்நிலைக்கு கீழே இவர்கள் விடுதலை செய்வதற்கு ஊடாக தமிழ் மக்கள் மத்தியிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கலாம் என்று நாங்கள் நினைக்கின்றோம். - என்றார்.

# வன ஜீவராசிகள் திணைக்கள ஊழியர்களுக்குக் கொரோனா!

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றச்சாட்டு

வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள ஊழியர்களிடையே கொவிட் - 19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த திணைக்களம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அகில இலங்கை வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களின் தனிமைப்படுத்தலுக்காக தனி இடங்கள் இல்லாத காரணத்தால் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ஷானுக ரணவக்காராச்சி தெரிவித்தார்.

குறிப்பாக கடந்த ஞாயிற்றுக் கிழமை நிலைவரப்படி சிங்கராஜா வனஜீவராசிகள் பாதுகாப்புதிணைக்கள அலுவலகத்தின் அனைத்து ஊழியர்களும் கொவிட்-19 நோயால் பாதிக் கப்பட்டுள்ளனர்.

எனவே அவர்களால் அந்தப் பகுதியில் தங்கள் கடமைகளைச் செய்ய முடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சுமார் 120 ஊழியர்கள் கொரோனாவால் பாதிக் கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 14 ஆயிரத்து 394 பேர் சுகமாகி வீடுகளுக்கு!

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 14 ஆயிரத்து 394 பேர் குணமடைந்து நேற்று (திங்கட்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இது வரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 71 ஆயிரத்து 992 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 26 ஆயிரத்து 169 ஆகப் பதிவாகியுள்ளது.

மேலும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 775ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் 66 பேர் வெளியேற்றம் தங்கியிருக்க 21 பேர் விருப்பம் தெரிவிப்பு

## வெளிவிவகார அமைச்சு

தலிபான்கள் ஆப்கானிஸ்தானை முழுமையாக கைப்பற்றியுள்ள நிலையில் அங்கிருந்து இதுவரை 66 இலங்கையர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து புறப்படுவதற்கு பயண அனுமதி பெற்ற அனைவரும் பாதுகாப்பாகவும் ஒழுங்காகவும் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என நம்புவதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இன்றுவரை, அறுபத்தாறு இலங்கையர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் எனவும் மேலும் ஏழு பேர் வெளியேற்றப்படவுள்ளனர் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இருபத்தி ஒன்று இலங்கையர்கள் தொடர்ந்தும் ஆப்கானிஸ்தானில் தங்கி இருப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இலங்கை தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்றும் மனிதாபிமான நிலைமை குறித்து கவலை கொண்டுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# வீட்டில் கொவிட் மரணங்கள் ஏற்பட்டால் சடலத்தை கொண்டுசெல்ல வாகன வசதி

திருகோணமலை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கொவிட் தொற்றால் வீட்டில் மரணிப் போரின் உடல்களை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகன வசதியில்லாமல் பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என நகராட்சிமன்றத்தின் கவனத்துக்கு பலதரப்பினராலும் அறியத்தரப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு நேற்று திங்கட்கிழமை முதல் கொவிட் தொற்றால் வீட்டில் மரணிப்போரின் உடல்களை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகன வசதிகளை நகராட்சிமன்றம் இலவசமாக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

மேலும் மரணம் கொவிட் தொற்றால் ஏற்பட்டது என்பதை பொது சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உறுதிப்படுத்தும் பட்சத்தில் இந்தச் சேவையை வழங்க முடியும்.

மேற்குறிப்பிட்ட வாகன ஏற்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கலைச்செழியன் -0771753810, கமலேஸ்வரன் - 0775384096 ஆகிய இலக்கங் களுடன் தொடர்புகொள்ளலாம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மனித உயிர்களா? பொருளாதாரமா?

**நாட்டின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதா? அல்லது மனித உயிர்களைக் காப்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதா?**

**முடிவெடுக்க முடியாமல் அல்லாடுகின்றது அரசு. கொவிட் தொற்றுப் பரவல் குறித்த விடயம் ஆட்சித் தலைமைக்கு புதிய புதிய நெருக்கடிகளாக – சிக்கலைத் தருகின்றனவாக – தினசரி மாறி வருகின்றன.**

**வருகின்ற செப்ரெம்பர் 18 வரை நாட்டை அரசு முழு அளவில் மூடி, முடக்கி வைத்திருக்குமானால் குறைந்த பட்சம் ஏழாயிரத்து ஐந்நூறு மனித உயிர்களைப் பாதுகாக்க முடியும் என்றும் –**

**அதையும் தாண்டி – நாளை பிறக்கும் செப்ரெம்பர் மாதத்தையும் தாண்டி – ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை நாட்டை முடக்கினால் பத்தாயிரம் மனித உயிர்கள் வரைப் பாதுகாக்க முடியும் என்றும் –**

**தெரிவிக்கும் விஞ்ஞானபூர்வ ஆய்வு அறிக்கை ஒன்றை உலக சுகாதார ஸ்தாபனம் சமர்ப்பித்துள்ளது. அது அரசிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக இலங்கை மருத்துவச் சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்னா தெரிவித்திருக்கின்றார்.**

**உலக சுகாதார ஸ்தாபனத்தின் எதிர்வு கூறலுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பத்தாயிரம் உயிர்களைக் காப்பாற்றுவதற்குக் காத்திரமான நடவடிக்கையை அரசு எடுக்கப்போகின்றதா? அல்லது பொருளாதார நெருக்கடிச் சிக்கல் என்ற இக்கட்டுக்கு முகம் கொடுப்பதற்காக இந்த எண்ணிக்கையில் மக்களை காவு கொடுப்பதற்கு அரசு இணங்கப்போகின்றதா?**

**எப்படிச் செயற்பட்டாலும் இந்த அரசு கடைசியாக மக்களிடம் சம்பாதிக்கப்போவது கெட்ட பெயர்தான் என்பது துலாம்பரம்.**

**மனிதச் சாவுகளைக் குறைப்பதற்காக பொது முடக்கத்தை நீடித்து – பொருளாதார நெருக்கடிகளின் விளைவை – மக்கள் மீது சுமத்தினாலும் மக்கள் கோபிப்பார்கள்.**

**மாறாக, பொருளாதார நெருக்கடிகளைக் கொஞ்சம் குறைப்பதற்காக முடக்கங்களைத் தவிர்த்து இயல்பு நிலைக்கு, அனுமதித்து, மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதற்கு இடமளித்தாலும் மக்கள் சீறுவார்கள்.**

**'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' – என்ற மாதிரியான நிலைமை. என்ன செய்யப் போகின்றது அரசு?**

**பொருளாதார நிலைமை சரிந்து, அதல பாதாளத்திற்குள் வீழ்ந்தாலும் அதனை மீட்கலாம், என்றோ ஒரு நாள் – எப்படியோ ஒரு விதத்தில் – மீட்கலாம். ஆனால் மனித உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்பட்டால் அவற்றை மீட்கவே முடியாது என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா போன்றோர் சுட்டுகின்றனர். அதனால் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கே அரசு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட வேண்டும் என்கின்றனர் அவர்கள்.**

**அந்த ஆலோசனையை – வழிகாட்டலை – பரிந்துரையை – ஏற்றுக் செயற்படுவதுதான் மனிதாபிமானத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் ஓர் அரசின் செயற்பாடாக இருக்க முடியும்.**

**இது உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரை என்பதால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனடிப்படையில் முடிவெடுப்பது அரசின் கடப்பாடாகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புக்கின்றோம்.**

**இந்த நெருக்கடி சமயத்தில் – இக்கட்டு வேளையில் – அரசுத் தலைமை தான்தோன்றித்தனமாக – எதேச்சாதிகாரமாக – தன்பாட்டில் முடிவெடுத்து நாட்டைச் சிக்கலில் மூழ்கடிப்பதை விடுத்து –**

**முதலில் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு, அடுத்து எல்லாத் தரப்பினரையும் அரவணைத்துப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான திட்டத்தை வகுப்பது தான் பொருத்தமானது.**

**ஆனால், பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியைத் தூண்டி, இனங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தி, குரோதத்தில் அரசியல் நடத்தும் – ஆட்சி நடத்தும் – கோட்டா தலைமைக்கு நாட்டை ஐக்கியப்படுத்தி பேரிடரை எதிர்கொள்ளும் தலைமைத்துவத் தகுதி இல்லை என்பதுதான் நிஜ நிலைமையாகும்.**

# நாட்டில் நெருக்கடி சூழ்நிலையில் பொறுப்பை கைவிட்டுள்ளது அரசு!

### ஜே.வி.பி. கடும் சாடல்

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தை மக்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அரசு எடுத்துள்ள தீர்மானத்தால் மக்கள் பாரிய விளைவுகளை எதிர்கொண்டுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாடு தற்போது முகங்கொடுத்துள்ள கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது.

அதேபோன்று அத்தியாவசிய மருந்துகளின் விலையும் அதிகரித்துள்ளது. இவை தொடர்பில் அரசு எடுத்துள்ள தீர்மானத்தால் மக்கள் பாரிய விளைவுகளை எதிர்கொண்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கும் கொடுப்பனவையும் அரசு குறைத்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பிலேயே அண்மைய நாள்களில் அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றது.

உலக சந்தையில் டொலரின் பெறுமதி அதிகரித்தமை, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை, ஏற்றுமதி, இறக்குமதி வரையறுக்கப்பட்டமை, கொரோனாத் தொற்றால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி போன்றவையே அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்துக்குக் காரணம் என்று அரசு தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது.

தினமும் நுகர்வுக்குப் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களான பால் மா, சீனி, எரிவாயு, மண்ணெண்ணெய் அதேபோன்று எரிபொருள்களின் விலையேற்றத்தை மக்களால் எதிர்கொள்ள முடியவில்லை. இதில் பிரதான காரணியாக சீனியின் விலையேற்றம் காணப்படுகின்றது.

அதேபோன்று பால் மா, பிரதான ஔடதங்களுக்கான தட்டுப்பாடு பாரிய பிரச்சினையாக உள்ளது. மக்கள் தங்களது பொறுப்பை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது போலவே அரசு செயற்பட்டு வருகின்றது. துறைசார்ந்த அமைச்சர் தன்னால் எதனையும் செய்ய முடியாது என்று கூறினார்.

தற்போதைய நெருக்கடிச் சூழலில் இவ்வாறான ஒரு பதிலையா மக்கள் அரசிடமிருந்து எதிர்பார்க்கின்றனர் என்பதே எமது கேள்வியாக உள்ளது. அரசு தனது பொறுப்பை எவ்வாறு கைவிட்டுள்ளது என்பது இதனூடாகத் தெரிகின்றது.- என்றார்.

# நான் ஜனாதிபதி செயலகம் செல்லும் வரை சுகாதார அமைச்சு பறிபோவது தெரியாது!



மனந்திறந்தார் பவித்ரா

சுகாதார அமைச்சராக தான் பணியாற்றிய முறையில் ஏதேனும் அதிருப்தி இருக்கிறதா என்பது தொடர்பில் தனக்குத் தெரியாது என போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

ஜனாதிபதி செயலகத்துக்கு செல்லும் வரையில் தனக்கு புதிய அமைச்சு வழங்கப்பட்ட விடயம் தெரியாது. ஜனாதிபதி செயலகத்துக்கு சென்றதன் பின்னரே அமைச்சுக்களில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளமையை அறிந்தேன்.

இது ஓர் எதிர்பாராத நிகழ்வாகும். அத்தோடு, ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தனக்கு அழைப்பு வரும் போது தான் சுகாதாரப் பிரிவினருடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போது வழங்கப்பட்டுள்ள போக்குவரத்து அமைச்சிலும் தனது பங்களிப்பை முழுமையாக வழங்கி கடமையை மேற்கொள்கிறேன் எனவும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

# அசங்க நவரத்ன எம்.பிக்கு கொவிட்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இந்தத் தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் பேஸ்புக் பதிவில் உறுதிப்படுத்தியுள்ளார்.

நான் கொவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளமையால், அண்மைய நாள்களில் என்னுடன் தொடர்புகளை பேணிய அனைவரும் சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இலங்கையில் சுப்பர் டெல்டா வைரஸ் திரிவா? ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆய்வு

இலங்கையில் சுப்பர் டெல்டா வைரஸ் திரிவு பரவுகின்றதா என்பதைக் கண்டறிய பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பரிசோதனைக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பரிசோதனை தொடர்பான இறுதி அறிக்கை ஒருவாரத்தில் வெளியிடப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை டெல்டா வைரஸ் திரிவு நாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் 100 சதவீதம் டெல்டா வைரஸ் திரிவு பரவியுள்ளதாகவும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனம் தெரிவித்திருந்தது.

மேலும், வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கின்றபோது இது சுப்பர் டெல்டா வைரஸ் திரிவாக இருக்கலாம் என பல ஆய்வாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே, சுப்பர் டெல்டா வைரஸ் திரிவு பரவுகின்றதா என்பதைக் கண்டறிய பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 61

ந.வித்தியாதரன்

தமிழகத்தில் என் சொந்த வேலைக்காகப் புறப்பட்ட என்னை, நாம் தொடங்கவிருக்கின்ற பத்திரிகை தொடர்பில் நேரத்துடனேயே - அந்தப் பத்திரிகை வெளிவர முன்னரே - தமிழகத்தில் இயங்குகின்ற தமிழ்ப் போராளிகள் இயக்கங்களின் தலைமையுடன் தொடர்புகொண்டு பேசி, ஊடாட்டம் வைத்து, ஒரு நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று சிவநாயகம் ஐயா தந்த ஆலோசனையின் ஆழம் - முக்கியத்துவம் - அப்போது எனக்குப் புரியவில்லை என்று குறிப்பிட்டேன் அல்லவா?

நாங்கள் பத்திரிகை தொடங்கிய காலகட்டத்தில் அதன் அர்த்தம் - அந்த ஆலோசனையின் முக்கியத்துவம் - எனக்கு புரியலாயிற்று.

சற்றுக் காலம் போக - களத்தைக் கைப்பற்றி நிர்வாகத்தை நடத்தப் போகின்ற தரப்புகளுடன் ஓர் உரையாடலை - தொடர்பாடலை - பேணாமல் எமதுபாட்டில் ஒரு பத்திரிகையை அந்த இடத்திலிருந்து நடத்த முற்பட்டால் என்னவாகும் என்பதை நான் நேரில் கண்டறியும் ஒரு சூழல் ஏற்பட்டது. அப்போதுதான் சிவநாயகம் ஐயாவின் அந்த ஆலோசனையின் அற்புதமான பெறுமதி எனக்கு புரிந்தது.

இனி, அந்த விடயத்திற்குள் செல்வோம் வாருங்கள்.

1985 - 1986 ஆம் ஆண்டுக் காலப்பகுதி அது. யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாடு, ஈழமுரசு, உதயன், முரசொலி என நான்கு பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. சிவில் நிர்வாகம் குலையத் தொடங்கிய கால கட்டம். அதனால் பத்திரிகைகளும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சூழல்.

கொழும்பிலிருந்து தேசியத் தமிழ் தினசரிகளாக வீரகேசரி, தினபதி, தினகரன் (அரசு நாளிதழ்) ஆகியன வந்து கொண்டிருந்தன. தினக்குரல் அப்போது தொடங்கப்படவில்லை. தேசிய நாளிதழ்களில் வீரகேசரியே வடக்கு,கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - கோலோச்சிக் கொண்டிருந்தது. ஆனாலும் முதல் நாள் மாலையில் அச்சாகும் வீரகேசரியில் மாகாணப் பதிப்பே யாழ் குடாநாட்டுக்கு வந்து கொண்டிருந்தது. அதனால் இயக்க மோதல்களும், தாக்குதல்களுமாக முதல் நாள் மாலையிலும் இரவிலும் நடைபெறும் சம்பவங்களை வீரகேசரியினால் அதன் மாகாணக் காலைப் பத்திரிகையில் செய்தியாகத் தர முடியாதிருந்தது. அவற்றை உள்ளூர் பத்திரிகைகள் நான்கிலுமே பார்க்க முடியும் என்ற நிலை. அத்தோடு தமிழர் தாயகத்தில் இயங்கிய தமிழ்ப் போராளிகள் இயக்கங்களுக்கும் இந்த நான்கு தினசரிகளுடனும் ஊடாடி, தொடர்புகளைப் பேணி, செய்திகளை வெளியிடும் வாய்ப்புகள் தாராளமாக இருந்தன. கொழும்பில் இருந்து இயங்கும் வீரகேசரி, தினபதி, தினகரன் போன்றவற்றின் ஆசிரிய பீடங்களுடன் நெருங்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு அறவே இருக்கவில்லை.

அதனால் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு நெருக்கமான - ஆதரவான - பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகின்றவைதான் என்ற கண்ணோட்டம் சாதாரணமாகப் பதிந்தது.

அத்தோடு தலைநகர் கொழும்பிலிருந்து வெளிவருவதால் இயக்க நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை வெளியிடும் போது மிக எச்சரிக்கையோடும் சட்ட நுணுக்கங்களோடும் அவற்றை அணுக வேண்டிய கட்டாயம் கொழும்பு நாளிதழ்களுக்கு. இந்த விடயத்தில் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் கொஞ்சம் துணிவோடும் வெளிப்படையாகவும் விடயங்களை எழுதின. நெருங்கிப் பக்கத்தில் நிற்கும் போராளிகளின் பிரசன்னம் இதற்கு காரணம் என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.

இதனால் 80 முற்பகுதிவரை கொழும்பு தேசிய நாளிதழ்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த வடபகுதி வாசகர்களும் தத்தமது பிரதேசத்தின் முக்கிய அரசியல், விடுதலைப் போராட்ட செய்திகளை விரைவாகவும் முக்கியம் கொடுத்தும் தருகின்ற யாழ் பத்திரிகைகள் பக்கம் தங்களது கவனத்தையும் ஈடுபாட்டையும் திருப்பத் தொடங்கினர்.

தமது பிரதான வாசகர்களான வடக்கு - கிழக்கு தாயக மக்களின் கவனம் தங்கள் பக்கத்தில் இருந்து திரும்புகின்றது என்பதைக் கண்ட வீரகேசரி அப்போது ஒரு முக்கிய நகர்வை எடுத்தது. யாழ்ப்பாணத்திலிருந்து தங்களது மாகாணப் பதிப்பை நேரடியாக வெளியிடப்போவதாக அது தன்பாட்டில் அறிவித்தது. சைவ பரிபாலன சபையின் 'இந்து சாதனம்' பத்திரிகை அச்சிட்ட கட்டடத்தைக் குத்தகைக்கு எடுத்து, புதிய அச்சகம் ஒன்றை வீரகேசரி அமைத்தது. அச்சு இயந்திரங்களும் ஏனைய உபகரணங்களும் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டன. பணிக்கு அச்சுக் கோர்ப்பாளர்கள், இயந்திர இயக்குநர்கள், ஒப்பு நோக்கர்கள், எழுதுவினைஞர்கள் என்று ஆள்கள் பணிக்குச் சேர்க்கப்பட்டனர்.

நான்கு பிராந்தியப் பத்திரிகைகளில் இருந்தும் வேலையாள்கள் வேதனம் அதிகம் தரக்கூடிய தேசிய பத்திரிகையின் யாழ் பதிப்புக்கு இடம் பெயரத் தொடங்கினர்.

ஒருபுறம் கொழும்பில் ஒரு பத்திரிகை ஆசிரியர் பீடத்தையே முழுமையாக வைத்து இயக்கும் தனித்



துவம் வீரகேசரிக்கு இருந்தது. தலைநகரில் 60 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வெளிவருகின்ற - தன்னை வலிமையாக நிலைநிறுத்திக் கொண்ட - பத்திரிகை. ஆளணி, அம்பிலிருந்து சகல வசதிகளும் கொண்ட நாளிதழ். அப்படியே கொழும்பு மற்றும் தேசிய செய்திகள் அச்சிட்ட தாள்களாவும் செய்திகளாகவும் கொழும்பில் இருந்து வந்து நேரடியாக இறங்கும். யாழ் பிராந்திய செய்திகளை - முதல் நாள் நள்ளிரவு வரையான தகவல்களை - பண பலமும் பிற வசதி வலிமைகளும் கொண்ட தன்னுடைய ஆசிரிய பீடம் மூலம் தயாரித்து, கொழும்பு மற்றும் தேசிய செய்திகளோடு சேர்த்து அது படைக்கும்.

அதனோடு குடாநாட்டில், குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் நான்கு யாழ்ப்பாணப் பத்திரிகைகளுக்கும் ஈடு கொடுக்க முடியுமா என்று நான்கு பத்திரிகைகளும் முழுசிக் கொண்டிருந்த காலகட்டம் அது. வீரகேசரியின் யாழ் பதிப்பு இதோ சில தினங்களில் விநியோகத்துக்கு வரப்போகின்றது என்ற செய்தி - தகவல் - நான்கு யாழ் பத்திரிகைகளையும் குழப்பத்தில் ஆழ்த்தி இருந்த அந்தச் சமயத்தில்தான் அந்தப் பிந்திய தகவல் வந்தது.

திடீரென ஈ.பி.ஆர்.எல்.எவ். இராணுவப் பிரிவு வீரகேசரியின் இயந்திரப் பகுதியைக் கைப்பற்றியிருப்பதாகவும், வீரகேசரியின் யாழ். பதிப்பை அந்த அமைப்புத் தடை செய்திருப்பதாகவும் தகவல் வந்தது. அந்த அமைப்பின் இராணுவத் தளபதி டக்ளஸ் தேவானந்தாதான் இந்த நடவடிக்கையை எடுத்து இருக்கின்றார் என்ற தகவல் கசிந்தது. அந்த இயக்கத்துடன் அப்போது எனக்கு அதிகம் நெருக்கமோ பழக்கமோ இருக்கவில்லை. அவர்களின் சென்னை அலுவலகத்தில் ஏற்படுத்திய சந்திப்புடன் சரி. உள்ளூரில் அறிக்கைகள், செய்திகள் கொண்டுவரும் இரண்டொரு போராளிகளுடன் முகப்பழக்கம் உண்டு. ஆனால் அவர்கள் மூலம் இவ்விடயத்தில் அதிகம் அறிய முடியவில்லை.

வீரகேசரி ஒரு கொழுத்த நிறுவனம். அவர்களிடம் சுளையாக ஏதோ கப்பம் அறவிட இந்த நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்று எண்ணினேன். பெரியதாக ஏதேனும் வாங்கிக்கொண்டு விட்டுவிடுவார்கள் என்றும் எனக்குள் நினைத்துக் கொண்டேன். மேற்படி ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்துடன் பல மட்டங்களில் வீரகேசரி தொடர்பாடல்களை ஏற்படுத்தி இயந்திரத்தை விடுவிக்கச் செய்து, மாகாணப் பதிப்பை வெளியிடத் துடியாய்த் துடித்தமையையும் பல தரப்பட்டவர்களையும் தொடர்புகொண்டமையையும் நான் அறிந்தேன்.

ஆனால் காரியம் நடப்பதாகத் தெரியவில்லை. வீரகேசரி மாகாணப் பதிப்புக்கு இடமளிப்பதில்லை என ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் யாழ் பொறுப்பாளர் தீர்மானித்திருக்கிறார் என்றொரு செய்தியும் கசிந்தது.

அதற்கிடையில் வீரகேசரியின் அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி ஈ.பி.ஆர்.எல்.எவ். தனது பிரசார விடயங்களை - போஸ்டர்களை - அச்சிடப் போகின்றது என்ற கதையும் வெளியானது.

இந்தப் பின்புலத்தில்தான் முன்னர் குறிப்பிட்டபடி டக்ளஸ் தேவானந்தா மீது அபிமானமும் மரியாதையும் கொண்ட என் பாடசாலை நண்பனை யாழ் இந்துக் கல்லூரி மைதானப் பகுதியில் சந்தித்தேன். நானும் அவனும் ஒன்றாகக் கிரிக்கெட் அடித்துத் திரிந்தவர்கள். அவன் இப்போது ஆஸ்திரேலியாவில் இருக்கின்றான்.

வீரகேசரி போன்ற வலிமையான பத்திரிகை மீது அநாயசமாகக் கை வைத்து, அதன் பிரசுரத்தையே தடுத்து நிற்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு எங்களைப் போன்ற புதிய மாகாணப் பத்திரிகைக்கு ஆப்பு அடிப்பது சின்ன வேலை என்பது எனக்குப் புரிந்தது. அது பற்றிய ஒரு பயம் எங்களுக்குள் இருந்தது. அதனால் அது பற்றிய விடயத்தை அந்த நண்பனிடம் நான் மனம் திறந்து கொட்டினேன். உங்கள் நண்பர் - நீங்கள் அதிகம் மதித்து பேசும் உங்கள் ஹீரோ - டக்ளஸ் தேவானந்தா ஊடகங்கள் மீது கைவைத்தமை அடாத்துச் செயல், அட்டகாசம், அத்துமீறல் என்ற சாரப்பட என் நெஞ்சத்து உணர்வுகளைக் கொட்டித் தீர்த்தேன். அந்த நண்பன் மைதானச் சுவரில் சாத்தி வைத்திருந்த சைக்கிளில் அமர்ந்தபடி அமைதியாகச் செவிமடுத்துக் கொண்டிருந்தான். வழமையாக எதற்கெடுத்தாலும் இப்படியான விடயங்களில் என்னுடன் விவாதிக்கும் அவன் அன்று எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் என்று நினைவு.

அடுத்த நாள் காலையில் அந்த நண்பன் என் அலுவலகத்திற்குத் தேடி வந்தான். அவன் சொன்ன செய்தி கேட்டு நான் பதறிப் போனேன்.

உன்னை இன்று மாலை கூட்டி வரச் சொன்னார் டக்ளஸ் தேவானந்தா என்றான் அவன்.

அதைக் கேட்டு நான் பதறியமையில் நியாயம் இருந்தது.

அதை விட, டக்ளஸ் தேவானந்தாவை அன்று மாலை சந்தித்தபோது வீரகேசரி பத்திரிகை பிரசுரத்தைத் தடுத்து நிறுத்தியமைக்கு அவர் கூறிய காரணம் எனக்கு உச்ச வியப்பைத் தந்தது. அவற்றின் விவரத்தை நாளை பார்ப்போம்.

அங்குதான் சிவநாயகம் ஐயாவின் ஆலோசனையின் தாற்பரியத்தை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 14

## திரவ அளவீடுகள்

* திரவங்களை அளக்கப் பயன்படும் அலகுகளாக ml, l ஆகும்.
* திரவங்களை அளக்கப் பயன்படும் அளவுச்சாடிகளாக 100ml, 200ml, 250ml, 500ml, 1000ml காணப்படுகிறது.



பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| சந்தர்ப்பம் | அலகு |
|---|---|
| ஒரு நாளில் உமது தந்தையார் அருந்தும் நீரின் அளவு | |
| தேக்கரண்டியில் ஒரு தடவை எடுக்கும் திரவத்தின் அளவு | |
| உமது வீட்டில் உள்ள நீர்த் தாங்கியின் நீரின் அளவு | |
| உமது தாயார் சமையலின் போது ஒரு தடவை விடப்படும் தேசிக்காய்ச்சாறின் அளவு | |
| கோரானா தடுப்பூசி ஒருவருக்கு ஏற்றப்பட்ட மருந்தின் அளவு | |

* மில்லிலீற்றருக்கும், லீற்றருக்கும் இடையிலான தொடர்பு

01. l இல் உள்ளதை ml இற்கு மாற்றுக

**1l = 1000ml**

4l = 4 × 1l
= 4 × 1000ml
= 4000ml

3.45l = 3.45 × 1l
= 3.45 × 1000ml
= 3450ml

l, ml இல் உள்ளதை ml இற்கு மாற்றுக

1l = 1000ml

5l 650ml = 5l + 650ml
= 5000ml + 650ml
= 5650ml

2l 75ml = 2l + 75ml
= 2000ml + 75ml
= 2075ml

ml இல் உள்ளதை l இற்கு மாற்றுக.

$1ml = \frac{1}{1000}l$

$3000ml = \frac{3000}{1000}l$
= 3l

$2005ml = \frac{2005}{1000}l$
= 2.005l

ml இல் உள்ளதை l, ml இற்கு மாற்றுக

2745ml = 2000ml + 745ml
= 2l + 745ml
= 2l 745ml

1025ml = 1000ml + 25ml
= 1l + 25ml
= 1l 25ml

பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக

| ml | l, ml | l |
|---|---|---|
| 2400ml | 2l 400ml | ............... |
| 4250ml | ............ | 4.25l |
| ............. | 6l 5ml | 6.005l |
| 6425ml | 6l 425ml | ............... |
| ........ | 8l 50ml | 8.05l |
| 6525ml | ............ | ........... |
| ............ | 5l 5ml | ............ |
| ............ | 2l 125ml | ............ |
| ........... | ............ | 8.25l |
| 2505ml | ............ | ............ |

திரவ அளவீடுகளைக் கூட்டுக.

| | ml |
|---|---|
| | 250 |
| + | 125 |
| | 375 |

| | l | ml |
|---|---|---|
| | 5 | 425 |
| + | 4 | 265 |
| | 9 | 690 |

பின்வரும் திரவ அளவீடுகளை கூட்டுக

1) 425ml + 240ml = ...............
2) 375ml + 685ml = ...............
3) 5l 48ml + 2l 250ml = ...............
4) 5l 5ml + 8l 125ml = .............
5) 8l 450ml + 750ml = ............
6) 425ml + 6l 875ml = ..............
7) 9l 5ml + 650ml = ...........
8) 12l 25ml + 645ml = .............
9) 1l 45ml + 5l 60ml = ..........
10) 25l 650ml + 8l 750ml = ............

திரவ அளவீடுகளின் கழித்தல் கணிதச் செய்கை

| | ml |
|---|---|
| | 650 |
| - | 456 |
| | 194 |

| | l | ml |
|---|---|---|
| | 5 | 250 |
| - | 3 | 750 |
| | 1 | 500 |

பின்வரும் திரவ அளவீடுகளின் கழித்தல் கணிதச் செய்கை செய்க

1) 950ml – 250ml = .............
2) 625ml – 250 ml = ............
3) 5l 225ml – 2l 452ml = .........
4) 8l 500ml – 5l 200ml = .......
5) 6l – 2l 450ml = .............
6) 4l – 250ml = .............
7) 5l – 50ml = ............
8) 15l 250ml – 8l 750ml = ......
9) 2l 125ml – 650ml = .........
10) 6l – 3l 650ml = .................

* வசன பிரசினத்தில் உள்ள திரவ அளவீடுகளில் கூட்டல் கணித செய்கை பிரசினங்களை தீர்த்தல்.

ஒரு நீர்த்தாங்கியில் ஆரம்பத்தில் உள்ள நீரின் அளவு 15l 650ml. சேர்க்கப்பட்ட நீரின் அளவு 25l 750ml ஆகும். தற்போது உள்ள நீரின் அளவு யாது?

ஆரம்பத்தில் உள்ள நீரின் அளவு = 15l 650ml
சேர்க்கப்பட்ட நீரின் அளவு = 25l 750ml
தற்போது உள்ள நீரின் அளவு = 15l 650 ml + 25l 750ml
= 41l 400ml

1. ஒரு மோட்டார்சைக்கிளில் ஆரம்பத்தில் உள்ள பெற்றோலின் அளவு 3l 250ml ஆகும். பின் அடிக்கப்பட்ட பெற்றோலின் அளவு 5l 500ml எனின் தற்போது உள்ள பெற்றோலின் அளவு யாது?

..........................................................................................

2. ஒரு பாடசாலையின் நீர்தாங்கியில் ஆரம்பத்தில் உள்ள நீரின் அளவு 25l 465ml ஆகும். சேர்க்கப்பட்ட நீரின் அளவு 35l 755ml ஆகும். தற்போது உள்ள நீரின் அளவு யாது?

..........................................................................................

3. ஒரு பாற்பண்ணையில் ஆரம்பத்தில் உள்ள பாலின் அளவு 15l 400ml ஆகும். ஒரு கால்நடை விவசாயிடம் பெற்ற பாலின் அளவு 10l 800ml ஆகும். தற்போது பாற்பண்ணையிலுள்ள பாலின் அளவு யாது?

..........................................................................................

* வசன பிரசினத்தில் உள்ள திரவ அளவீடுகளில் கழித்தல் கணிதச் செய்கை பிரசினங்களை தீர்த்தல்.

ஒரு எண்ணெய்த்தாங்கியின் ஆரம்பத்தில் உள்ள எண்ணெயின் அளவு 50l 425ml ஆகும். எண்ணெய்த் தாங்கியில் எடுக்கப்பட்ட எண்ணெயின் அளவு 12l 750ml எனின் தற்போது உள்ள எண்ணெயின் அளவு யாது?

ஆரம்பத்தில் உள்ள எண்ணெயின் அளவு = 50l 425ml
எடுக்கப்பட்ட எண்ணெயின் அளவு = 12l 750ml
தற்போது உள்ள எண்ணெயின் அளவு = 50l 425ml – 12l 750ml
= 37l 675ml

1. புகைவண்டியில் ஆரம்பத்தில் டீசலின் அளவு 50l ஆகும். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு புறக்கோட்டை செல்வதற்கு செலவழித்த டீசலின் அளவு 35l 650ml எனின். தற்போது உள்ள டீசலின் அளவு யாது?

..........................................................................................

2. ஒரு குளத்தில் ஆரம்பத்தில் உள்ள நீரின் அளவு 25l 750ml ஆகும். வயலுக்காக திறந்து விடப்பட்ட நீரின் அளவு 18l 500ml எனின். தற்போது குளத்தில் உள்ள நீரின் அளவு யாது?

..........................................................................................

3. ஒரு வியாபாரியிடம் ஆரம்பத்தில இருந்த நல்லெண்ணையின் அளவு 75l 450ml ஆகும். ஒரு கடைக்கு விற்க்கப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள நல்லெண்ணையின் அளவு 25l 500ml எனின். விற்க்கப்பட்ட நல்லெண்ணையின் அளவு யாது?

..........................................................................................

ஆக்கம் : திரு. பா.லாவண்யா - கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம், யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 14

## நேர்கோட்டுத்தள உருக்கள் - விடைகள்

(01)
a - குவிவு ஒழுங்கானது
b - குவிவு ஒழுங்கானது
c - குவிவு ஒழுங்கற்றது
d - குவிவு ஒழுங்கானது
e - குழிவு ஒழுங்கானது
f - குவிவு ஒழுங்கற்றது
g - குவிவு ஒழுங்கானது

(02) 1. சமனில் பக்க முக்கோணி
2. சமபக்க முக்கோணி
3. சமனில் பக்க முக்கோணி
4. சமபக்க முக்கோணி
5. இருசம பக்க முக்கோணி
6. சமபக்க முக்கோணி

(03) 1. கூர்ங்கோண முக்கோணி
2. செங்கோண முக்கோணி
3. விரிகோண முக்கோணி
4. கூர்ங்கோண முக்கோணி
5. கூர்ங்கோண முக்கோணி

ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 116

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**327. தமிழ் மக்களின் ஒற்றுமையீனம் அவர்கள் இனப்படுகொலைக்கு காரணம் என்கிறீர்களா?**


உள்ளங்கை புண்ணுக்கு கண்ணாடி தேவையில் லையென்பார்கள். அது போலவே தீக்கோழி தனது தலையை மணலில் புதைத்துவிட்டு தன்னை மறைத்து விட்டேன் என்று பாவனை செய்வது போல்தான் இதுவும்.

சுதந்திரத்துக்கு முன்னான காலத்தை விடுங்கள். அதற்கு பின்னரான இடைக்கால அரசியலிலிருந்தவற் றையும் விடுவோம்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றத் தமிழ்க் கட்சிகள் எல்லாமே ஒன்றுபட்டன. அந்தத் தீர்மா னத்தை நிறைவேற்றியதிலேயே, இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸின் தொண்டமான் வெளியேறினார். அமிர்தலிங்கம் தனது நாடாளுமன்ற அங்கத்துவத் துக்கு மீண்டும் அடிகோலுவதற்காகதான், துடித்துக் கொண்டிருந்த இளைஞர்களைத் தூண்டி அந்தத் தீர் மானத்தை நிறைவேற்றினார் என்ற கருத்தும் விதைத்து, இன்று வரையும் பேசப்படுகிறது.

அந்த ஒற்றுமையெல்லாம் ஒப்புக்காகவா என்று எண்ண வைத்தது அதைத் தொடர்ந்து வந்த தேர்தல் தொகுதிகள் பங்கீட்டில் அகில இலங்கை தமிழ் காங் கிரஸில் இருந்து வந்த வாதங்கள்.

அந்தத் தேர்தலை தொடர்ந்து, இளைஞர்கள் ஆயு தக் குழுக்களாக ஒன்றிலிருந்து, இரண்டாகி, மூன்றாகி, நான்காகி, ஐந்தாக பின்னர் கிட்டத்தட்ட 17 குழுக்கள் இயங்கின. இவற்றில் முக்கிய ஐந்து விடுதலை குழுக்களான விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ஈரோஸ் என்ப வையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகத் திம்புத் தீர்மானத்தை தமிழ் மக்களுக்காக கையளிப்பதற்கு சில மாதங்கள் முன்பு 10 ஏப்ரல் 1985இல், தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக ஈழத் தேசிய விடுதலை முன் னணி என்ற பொது அமைப்பை விடுதலைப் புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்.,தமிழீழ விடுதலை இயக் கம் ஆகிய நான்கும் புளொட்டை தவிர்த்து இணைந் தன. இந்த ஒற்றுமையானது, முன்னர் துணைக்காக செயல்பட்ட மூவரோடும் விடுதலைப் புலிகள் சேர்வ தில் அமைந்தது.




ஆனால் திம்பு தீர்மானத்தின் சில மாதங்களில் உடன்பாட்டுக்கான கையெழுத்தின் மை காயு முன்னரே மற்ற விடுதலை இயக்கங்கள் எல்லாம் தடை செய்யப்பட்டு, சகோதரப் படுகொலைகள் இனத்துக்குள்ளேயே கட்டவிழ்த்து விடப்பட்டன.

அதைத் தொடர்ந்து வந்த இந்தியப் படைகளுக்கு ஆதரவாக மற்ற இயக்கங்கள் விடுதலைப் புலிகளை அழிக்க ஆயுதங்கள் எடுத்தனர். அதனால் ஈ.என். டி.எல்.எவ். பிறந்து, டக்ளஸ் இணைந்த அரசியல் பரப்பில் தலைவரானார். கிழக்கின் தேசியவாதத்தை துணைக்குச் சேர்த்து, கருணாவும் பிள்ளையானும் பிரித்தனர். அவர் கள் இருவரும் ஒருவருக்கொருவர் மோதினார்கள். போர் முடிந்ததும் தமிழர் தேசியக் கூட்டமைப்பு தங்க ளைத் தலைவர்களாக முன்னிலைப் படுத்தி, பழைய விடுதலைப் புலிக ளின் ஆதரவாளர்களையோ அங்கத் தினர்களையோ அவர்களுடன் அணுகாமல் பார்த்துக் கொண்டனர். அவர்களிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரிந்து, பின்னர் விக்கினேஸ்வரன் தனிக் கட்சி தொடங்கி, எல்லோருமே தாங்கள் ஒற்றுமையாகத் தமிழ் தேசியத் துக்கோ அன்றில் தமிழ் மக்கள் நல னுக்காகவோ பாடுபடுகிறோம் என அறிக்கைகள் தருகிறார்கள். இவற்றை நாடாளுமன்ற அரசியலுக்கான கூட்டுக்கள் என்று கருதி தள்ளிவிட் டாலும் கடைசி மீள் கட்டுவதற்கு ஏலுமான முறையில் விடுதலைப் புலிகளிடையேயாவது ஒற்றுமை இருக்கிறதா என்று பார்த்தால் அவர் களும் கூட தனக்குத் தேறியது தனக்கு எனக் கட்டம் கட்டமாக நிற்கிறார் கள்.


புலிகள் தாக்குப்பிடிக்கமாட்டார்கள் என்ற செய்திகள்தான் அந்த உட்பூசல் கள் வெடித்து போரின் கடைசி நாள் களையும் ஆட்கொண்டன. அவை களால் ஏற்பட்ட ஒற்றுமையின்மை புலம்பெயர் மக்களின் ஆதரவுக ளையும் பாராதூரமாக பாதித்தது.

(வளரும்.....)


10-4-1985

தமிழீழப் போராட்டத்தில் புதிய திருப்பம்
விடுதலை அமைப்புகள் ஒன்றுபட்டன.

001539


(4) தேசிய சுதந்திரப் போராட்டத்தோடு சோசலிச புரட்சியையும் முன்னெடுத்த, சுதந்திரத் தாய்நாட்டில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

(5) உலக ஏகாதிபத்திய, நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை பூரணமாக விடுவித்த, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலை இயக்கம்

செயலதிபர்
ஈழமக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி

புரட்சிகர நிறைவேற்றுக்குழு
ஈழப் புரட்சி அமைப்பு

10/4/85

10 APR 1985

1985 ஏப்ரல் 10ஆம் திகதி உருவாக்கப்பட்ட ஈழத் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் (ENLF) உடன்பாட்டு ஆவணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தலைவர் சிறீசபாரத்தினம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்) செயலதிபர் க.பத்மநாபா, ஈழப் புரட்சி அமைப்பின்(ஈரோஸின்) நிறைவேற்றுக் குழு சார்பில் வே. பாலகுமார் ஆகியோர் ஒப்பமிட்ட ஆவணம்.

# தமிழர்களுக்கு மத்தியஸ்தம் மட்டுமே தேவை நடுவர் மன்றம் தமிழர்களை பலவீனப்படுத்தும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்



தமிழர்களுக்கு மத்தியஸ்தம் மட்டுமே தேவை. ஆனால் நடுவர் மன்றம் என்பது தமிழர்களை பலவீனப்படுத்தும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரி 1,656 ஆவது நாளாக சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில், சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று (நேற்று), ஒகஸ்ட் 30, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம். காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கான எங்கள் போராட்டம் தொடர்கிறது. இன்று (நேற்று) 1,656ஆவது நாளாக எங்கள் போராட்டம் தொடர்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினம், ஒவ்வோர் ஆண்டும் ஒகஸ்ட் 30 அன்று, தங்கள் உறவினர்கள் அல்லது சட்டப் பிரதிநிதிகளுக்குத் தெரியாத மோசமான சூழ்நிலைகளில் சிறைகளில் இருக்கும் தனிநபர்களின் தலைவிதிக்கு கவனத்தை ஈர்க்க உருவாக்கப்பட்டது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா எங்கள் விவகாரங்களில் தலையிடும் வரை எங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை கண்டுபிடிப்பது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் காணாமல் ஆக்கப்படும் குழந்தைகளை நிறுத்துவதற்கு ஒரு நிரந்தரத் தீர்வுக்காகவும் இந்தப் போராட்டத்தை நாங்கள் தொடருவோம்.

இலங்கை அரசாங்கத்தால் மாற்ற முடியாத ஒரு தீர்வை நாங்கள் விரும்புகிறோம். வடக்கு – கிழக்கில் உள்ள தமிழர்களுக்குப் பாதுகாப்பான பாதுகாக்கப்பட்ட தமிழர் தாயக தீர்வு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா மத்தியஸ்தம் செய்ய வேண்டும். மத்தியஸ்தம் என்பது நடுவர் அல்ல.

சித்தார்த்தன் எம்.பி., தேர்தல் 2020, இரவின் போது சுமந்திரன் 17 ஆயிரம் வாக்குகள் பெற்று 6 ஆவது இடத்திற்கு வந்தார் என்றார். ஆனால் சுமந்திரன் எப்படி எம்.பி. ஆனார் என்பது எங்களுக்குத் தெரியாது. அவர் தமிழர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தமிழ் எம்.பி. அல்லர்.

சில நாள்களுக்கு முன்பு, சுமந்திரன் சிங்கள ஊடகங்களின் உதவியுடன் ஒரு நாடகத்தை ஏற்பாடு செய்தார். அவர் ஒரு போதும் அமெரிக்கா அல்லது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற எந்த நாடுகளையும் தமிழ் அரசியல் தீர்வுகளுக்கு மத்தியஸ்தம் செய்யுமாறு கேட்கமாட்டார். இதைத்தான் நாங்கள் நீண்டகாலமாக கூறி வருகிறோம். ஆனால் 2 நாள்களுக்கு முன்பு சுமந்திரன் தான் அமெரிக்காவிடம் மத்தியஸ்தம் கேட்கமாட் டேன். இலங்கையுடன் மட்டுமே பேச்சு நடத்த வேண்டும் என்று உறுதி செய்துள் ளார்.

இந்த நிகழ்வுகள் தற்போதைய எம்.பிக்கள், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியாவை மத்தியஸ்தம் கேட்கவில்லை என்பதால், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவின் தலையீட்டை ஆதரிக்கக்கூடிய எம்.பிக்கள் தான் தமிழர்களுக்கு இப்போது தேவை.

சுமந்திரனுக்கு ஆதரவான புலம்பெயர் அமைப்புகள் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் விருப்பத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் நாங்கள் வேண்டுகிறோம். அது தான் ஐ.நா வாக்கெடுப்பு மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களுக்கான பாதுகாப்பான பாதுகாக்கப்பட்ட தமிழர் தாயக தேவை.

இந்த அமைப்புகள் தமிழர்கள் சார்பாக குரல் எழுப்ப முடியாவிட்டால், அவர்கள் தங்கள் அரசியல் பணிகளை நிறுத்தி போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவ வேண்டும். அவர்களின் கடைசி செய்திக்குறிப்பில் அவர்கள் தீர்வுக்கு நடுவர்கள் தேவை என்கிறார்கள். நடுவரின் செயல்பாடு நிதிச் சச்சரவுகளுக்கு தமது சொந்த முடிவை எடுப்பது. இது மத்தியஸ்தத்துக்கு முரணானது.

இந்த சொல்லு தமிழரை பலவீனப்படுத்தும். மத்தியஸ்தம் என்பது தான் போஸ்னியாவின் தீர்வுக்கு பாவித்த சொல்பதம். USPAC , ATC , BTF ,NCCT , ITF , NCET போன்ற இந்த சுமந்திரன் ஆதரவு குழுக்களை இலங்கையில் தமிழர்கள் சார்பாக குரல் எழுப்புமாறு வலியுறுத்துகிறோம். இந்தக் குழுக்கள் தங்கள் சொந்த சிந்தனையை உருவாக்க முடியாது. சர்வதேச விசாரணையை இல்லாமல் செய்தவர்களும், பெயர்ப் பலகை இல்லாமல் அரசியல் தீர்வை அழித்த குழுக்கள் தான் இவர்கள்.

இந்தக் குழுக்களுக்கு வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்களைப் பற்றி பேசும் அதிகாரம் யார் கொடுத்தது? இதனை 1,656 ஆவது நாள்களாக போராடும் தமிழ் தாய்மார்கள் நாங்கள் கேட்கின்றோம். எங்கள் போராட்டத்துக்கு விரைவான முடிவு கிடைக்க எல்லாம் வல்ல கடவுளை பிரார்த்திக்கிறோம். மேலும், இந்த ஆபத்தான வைரஸை அழிக்க நாங்கள் கடவுளை பிரார்த்திக்கிறோம் எனத் தெரிவித்தார். (100)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேச செயற்பாடுகள் குறித்து கவலை!

## உறவுகள் தெரிவிப்பு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை நிரந்தரமாக காணாமல் ஆக்குவதற்கு சர்வதேசம் செயற்பட்டு வருவதாக காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் மனுவல் உதயச்சந்திரா மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நாங்கள் நீதிக்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில், சர்வதேசம் எங்களை திரும்பிப் பார்க்காமல் இருக்கிறது.

மேலும், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி பல வருடங்களாக வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றோம்.

ஆனால், இன்று வரை இந்த விடயத்தில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இதேவேளை, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாப் பிரச்சினைகளுக்கு மத்தியில் நாங்கள் போராட முடியாத நிலையில், வீடுகளில் இருந்து தாய்மார் அழுது கொண்டு இருக்கிறார்கள்.

எனினும் நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுப்போம். எங்களுக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம்.

எங்கள் பிள்ளைகளை எங்களிடம் மீண்டும் ஒப்படையுங்கள் அல்லது என்ன நடந்தது என்று கூறுங்கள். அது வரை எமது போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பணத்துக்காகப் போராடவில்லை. நீதிக்காக போராடுகின்றனர். அதை அரசாங்கமும் சர்வதேசமும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆனால், தற்போது இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து சர்வதேசம் நாடகம் ஆடுகின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தியாகங்களைச் செய்ய வேண்டும் என கோருவதற்கு அரசுக்கு உரிமையில்லை!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 31

தியாகங்களை செய்ய வேண்டும் என மக்களிடமே கோரிக்கை விடுப்பதற்கு அரசாங்கத்துக்கு எவ்வித உரிமையும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டு மக்களுக்கான உரையில் ஜனாதிபதி தெரிவித்த கருத்து தொடர்பாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த நிபுணர்கள் குழுவை நியமிக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளமையும் ரணில் விக்கிரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்த கோரிக்கையை இலங்கையைத் தவிர்ந்த ஏனைய நாடுகள் நிறைவேற்றியுள்ளன எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆகவே இந்த சூழ்நிலையில் கொரோனாவைக் கட்டுப்படுத்த நிபுணர்கள் குழுவை நியமிப்பதாக அரசாங்கம் உறுதிமொழியை வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மட்டு. வாகரை களப்பு அபிவிருத்தி; அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆய்வு



மட்டக்களப்பு, வாகரை களப்பை ஆழப்படுத்தி கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வாகரை களப்புப் பகுதியை கடற்பகுதியோடு இணைக்கும் பகுதியில் மணல் நிரம்பி மூடியுள்ளதுடன் நீண்டகாலமாக களப்பு பிரதேசம் ஆழப்படுத்தப்படாமல் காணப்படுகின்றது.

குறித்த களப்பை தூர்வாரி ஆழப்படுத்துவதுடன், மணல் மேட்டையும் அகற்றித் தருமாறு பிரதேச கடற்றொழிலாளர் அமைப்புக்கள் தொடர்ச்சியாக கடற்றொழில் அமைச்சிடம் கோரிக்கை விடுத்து வந்தன.

இந்நிலையில் நேற்று (திங்கட்கிழமை) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மேற்படி கூட்டம் மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

வாகரை பிரதேச கடற்றொழில்சார் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தேவையான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறும், சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் இருந்து தேவையான அனுமதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளை இதன்போது அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

# இனவழிப்பு மூலோபாயத்தின் ஒரு பகுதியே வலிந்து காணாமலாக்கப்பட்டமை ஆகும்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்




தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமை, ஈழத்தமிழர்களுக்கு எதிரான சிறிலங்காவினது இனவழிப்பு மூலோபாயத்தின் ஒரு பகுதியே எனத் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இது தொடர்பில் அனைத்துலக விசாரணை வேண்டும் என்பதோடு, அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ளது.

ஒகஸ்ட் -30 வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளையொட்டி நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதோடு, புலம்பெயர் நாடுகளில் பல்வேறு கவனவீர்ப்பு போராட்டங்களையும் முன்னெடுக்கின்றது.

வலிந்து காணாமலாக்கலுக்கு இரையானவர்களை ஆவணமாக்கும் நோக்கில் 2018 ஆம் ஆண்டு 'உங்களை நாங்கள் மறவோம்' எனும் http://youarenotforgotten.org/about-us/. இணையத்தளம் ஒன்றையும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிமுகம் செய்திருந்தது

மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இன்று (நேற்று), 2021 ஒகஸ்ட் 30 ஆம் நாள் - வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாள்.

இலங்கைதீவில் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு சிறிலங்கா அரச படைகளால் கடத்திச் செல்லப்பட்ட, சிறிலங்கா இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட அன்புக்குரியவர்களைத் தேடியலையும் ஆயிரக்கணக்கான தாய்மார்களுக்கு, குடும்பங்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

2009 மே, இறுதிப்போரின் முடிவில் சிறிலங்கா இராணுவத்தால் வலிந்து கொண்டு செல்லப்பட்டு காணாமற்போன தமிழர்கள் இன்று வரை கணக்கெடுக்கப்படவே இல்லை. கொண்டு செல்லப்பட்டவர்கள் சிறிலங்காவின் இரகசிய தடுப்புக்களில் கடும் சித்திரவதைக்கும், பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாகி படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. 'காணாமற்போனவர்கள்' பெரும்பாலும் தமிழ் இளம் யுவதிகளே பெரும்பாலனவர்கள். இவர்களில் வணக்கத்துக்குரிய பிரான்ஸஸ் ஜோசப் என்ற கத்தோலிக்கக் குரு ஒருவரும் அடங்குவார்.

ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவரமொன்றின் படி வலிந்தோ தன்விருப்பமின்றியோ காணாமலாக்கும் செயல்களில் சிறிலங்காவே உலகில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது.

வலிந்து காணாமலாக்கிய செயல்களுக்குப் பொறுப்பான சிறிலங்கா படைத் தளபதிகளையும், அரசியல் தலைவர்களையும் கூண்டிலேற்றாது பாதுகாத்துக் கொள்வதிலேயே போருக்குப் பிந்திய ஆட்சியாளர்களின் கவனம் இருந்துள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பார்வையில், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் சிறிலங்கா அரசின் அணுகுமுறை ஈழத் தமிழர்களுக்கு எதிரான தன் இனவழிப்புச் செயல்களுக்கும் மானிட விரோதக் குற்றங்களுக்கும் பொறுப்புக்கூறுவதில் அதற்குள்ள அலட்சியத்தையே அனைத்து வகையிலும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

ஆகவே, வலிந்து காணாமலாக்கிய குற்றங்கள் உள்ளிட்ட இனவழிப்புச் செயல்கள் தொடர்பாகவும் மானிட விரோதக் குற்றங்கள் பற்றியும் அனைத்துலக விசாரணை வேண்டும் என்பதோடு, குற்றவாளிகள் அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்பது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கோரிக்கையாகும்.

சிறிலங்கா அரச நிறுவனங்களிலும் அரசியல் தளத்திலும் இனநாயகம் ஊன்றிப் படர்ந்து ஊடாடி நிற்கும் நிலையில், அவற்றால் வலிந்து காணாமலாக்கிய குற்றங்களால் துயரப்பட்டவர்களுக்கு நீதி வழங்க முடியவில்லை என்பது வெள்ளிடைமலை.

2009 ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தில் இருந்த மஹிந்த ராசபக்ஷ அரசாங்கம், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான அனைத்து புலனாய்வு விசாரணை முயற்சிகளையும் எதிர்த்து நின்றது. தொடர்ந்து ஆட்சிக்கு மைத்திரிபால சிறிசேனா, காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார்களையும் மனைவிமார்களையும் சந்தித்தார். காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் கவனிப்பதாக உறுதியும் அளித்தார். ஆனால் ஒன்றுமே செய்யவில்லை. அடுத்துவந்த அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ காணாமற்போன அனைவரும் இறந்து விட்டார்கள் என்றாரே தவிர, நீதி அதற்கான பொறுப்புக்கூறலுக்கு வழிசொல்லவில்லை. இறுதியில் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் சிறிலங்கா தொடர்பான தீர்மானித்திலிருந்தும்விலகிக் கொண்டார். அதாவது சிறிலங்கா அரசே தமிழர்களுக்கு நீதி மறுத்துள்ளது. இத்தனை ஆண்டுகளும் சிறிலங்காவின் தலைவர்கள்

(அ) சட்டச் செயல்வழிகளை மறித்துள்ளார்கள்

(ஆ) தாங்கள் கடைப்பிடிக்க ஒப்புக்கொண்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை மீறியுள்ளார்கள்

(இ) காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினருடன் இணைந்து பணியாற்றிய செயற்பாட்டாளர்களை மிரட்டி அச்சுறுத்தியுள்ளார்கள்

(உ) குற்றவாளிகளைக் குற்றவிளைவுகளிலிருந்து பாதுகாத்துக் கொண்டே பன்னாட்டு உடன்படிக்கைகளில் ஒப்பமிடுவதன் மூலம் வலிந்து காணாமலாக்கும் செயல்களை ஒழிக்கப் பாடுபடுவது போல் நாடகமாடியுள்ளார்கள்.

2015 செப்டெம்பரில் அப்போதிருந்த சிறிலங்கா அரசாங்கம் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையூடாக அனைத்துலக சமூகம் கொண்டுவந்த நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளைச் செயலாக்க ஒப்புக்கொண்டிருந்தது. காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான உண்மைகளை வெளிக்கொணர புலனாய்வு செய்யும் வழிவகைகளைச் செயலாக்கத் தொடங்குவதாக சிறிலங்கா அரசு கூறிய போதிலும் அது நிறுவிய கருவிகளிலிருந்து காணாமலாக்கப்பட்டுப் பிழைத்து மீண்டு வந்தவர்களின் தேவைகளைச் செய்து கொடுக்காமல் பன்னாட்டு சமுதாயத்தைக் குளிர்விப்பதில் மட்டுமே அது அக்கறை கொண்டிருக்கின்றமை தெரிந்துவிட்டது. அது வெறும் பொய்மையே என்று தெரிந்துவிட்டது.

ஐ.நாவின் 30/1 தீர்மானத்தை ஒட்டி அனைத்துலக வல்லுநர்களைக் கொண்டு காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அனைத்துலக சமூகத்தைக் கேலிசெய்து பழிப்புக் காட்டுவது போல் உள்நாட்டுச் செயற்பாட்டாளர்களைக் கொண்டு மட்டும் காணாமற்போனோர் அலுவலகம் ஒன்றை அமைத்தது. சிறிலங்கா அரசைப் பகைத்துக் கொள்ள விரும்பாத அனைத்துலக அரசுகள், தமது புவிசார் அரசியல் காரணங்களால் இந்த ஏற்பாட்டை அணைத்துக் கொண்டன என்பது வருத்தத்துக்குரியது.

காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் சங்கம் காணாமற்போனோர் அலுவலகத்திடம் கூறியது என்னவென்றால், உள்நாட்டுப் போரின் முடிவில் சிறிலங்கப் படையிடம் சரணடைந்து காணாமற்போனவர்களில் ஐந்தே ஐந்து பேர் என்னவானார்கள் என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடிந்தால் நாங்கள் உங்களை நம்பி இணைந்து பாடுபட அணியமாய் உள்ளோம் என்பதே. ஆனால் இதைக் கூட அவர்களால் செய்ய முடியவில்லை. இந்த அலுவலகம் தன் ஐந்தாண்டுகால வாழ்வில் காணாமற்போன சிலரின் பெயர்களை வெளியிட்டமைக்கு மேல், தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட நிகழ்வுகளை கருத்தூன்றிப் புலனாய்வு செய்யவே இல்லை.

சிறிலங்காவின் இப்போதைய அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் வழங்கிய நியமனங்கள், காணாமற்போனோர் அலுவலகத்தின் தற்சார்பை மேலும் சீர்குலைத்துள்ளன. இவ்வாறு அமர்த்தப்பட்டிருப்பவர்களில் ஒருவர் செய்தியாளர் லசந்த விக்கிரமதுங்கா கொலையில் சாட்சியத்தை அழித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி ஜெயந்த விக்ரமரத்னா ஆவர். இன்னொருவர் குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்களை விடுவிக்க முற்பட்ட ஆணைக்குழுவின் தலைவர் உபாலி அபயரத்னா.

முந்தைய ஆட்சியில் தொடுக்கப்பெற்ற சில குற்றவழக்காடல்களையும் கோட்டாபய ராஜபக்ஷ முடக்க முற்பட்டுள்ளார். இந்த மாதம் முற்பகுதியில் 2008, 2009 ஆண்டுகளில் பெரியோரும் சிறாருமான 11 பேர் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரணகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தலைமை அரசுச் சட்டத்தரணி கைவிட்டுக் கொண்டார்.

முல்லைத்தீவு நீதியர்களின் வழக்கு மன்றங்களில் துணிச்சலான குடும்பங்கள் தாக்கல் செய்த ஆட்கொணர்வு வழக்குகளை மையப்படுத்தியே சட்டச் செயல்வழிகள் அமைந்துள்ளன.

முறைப்பாட்டாளர்களில் பெரும்பாலானோர் 2009 மே மாதம் இறுதிப்போரின் போது சிறிலங்கா இராணுவத்திடம் தமது அன்புக்குரியவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் ஒப்படைக்கப்பட்டவர்களாவர். ஆனால் அவர்களின் அன்புக்குரியவர்கள் காணாமல் போய் விட்டார்கள்.

சிறிலங்காப் படையின் சட்டத்தரணிகள் இறுதியில் நீதிமன்றத்துக்கு வர இணங்கிய போது முறைப்பாட்டாளர்களுக்காக முன்னின்ற சட்டத்தரணிகள் குறுக்கு விசாரணையின் ஊடாக 2009 மே மாதம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் பட்டியல் அவர்களிடம் இருப்பதை வேறு வழியின்றி ஒப்புக் கொள்ளும் நிலைக்குத் தள்ளி விட்டார்கள். அதாவது அந்தப் பட்டியல்களில் பெயர் இடம்பெற்றிருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்த வேண்டும் என்று பொருள். ஆனால் சிறிலங்கப் படை பட்டியல் தர வேண்டும் என்று நீதியர் ஆணையிட்ட போதிலும் சிறிலங்கப் படை முட்டுக் கட்டை இட்டதால் வழக்கு முடங்கி விட்டது.

காணாமலாக்கும் குற்றங்கள் எளிதில் நடைபெறத் துணை செய்த கருவிகளில் ஒன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டமாகும். இந்தச் சட்டத்தை நீக்கம் செய்யும்படி தமிழர்களும் உள்நாட்டு, பன்னாட்டு மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்களும், அனைத்துலக அரசுகளும் கோரியுள்ள போதிலும், அப்படி எதுவும் நடக்கவில்லை. சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் இக்கோரிக்கையை முன்வைத்திருந்தது.

வலிந்து காணாமலாக்கலுக்கு இரையானவர்களை ஆவணமாக்கும் நோக்கில் 'உங்களை நாங்கள் மறவோம்' http://youarenotforgotten.org/about-us/. எனும் இணையத்தளத்தை 2018 ஆம் ஆண்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிமுகம் செய்திருந்தது. இந்த இணையத்தளத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அவர்கள் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்த வேண்டுகிறோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# காணாமல்போனோர் அலுவலகம் சுயாதீனமாக இயங்க வேண்டும்!

## இலங்கை அரசிடம் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கோரிக்கை



**இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் சுயாதீனமாக இயங்க வேண்டும் என்று இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர், அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களின்சர்வதேச தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களுடைய குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் ஆகியவற்றுடன் உலகம் நெடுகிலும் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு தோழமையுடன் இணைந்து கொள்கின்றது.

ஆளொருவர் வலிந்து காணாமல் ஆக்கப்படும் சம்பவம் குடும்பங்களினதும், சமூகங்களினதும் அன்புக்குரியவர்கள் குறித்த உண்மையைத் தெரிந்து கொள்ளும் உரிமையையும், பொறுப்புக்கூறல், நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான உரிமையையும் இல்லாமல் செய்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் அச்சத்துடனும் பாதுகாப்பற்ற உணர்வுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

காணாமல்போன குடும்ப உறுப்பினர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான போராட்டத்தின் முன்னணியில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்களே இருந்து வருகின்றனர்.

அவர்கள் அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் பழிவாங்குதல்கள் என்பவற்றை எதிர்கொள்ள முடியும்.

இலங்கையில் 2016ஆம் ஆண்டில் காணாமல்போன ஆள்கள் தொடர்பான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டமை அரசால் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான ஒரு வழிமுறையாகும்.

குறித்த அலுவலகத்தின் வெற்றி பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பப்படுவதில் தங்கியிருக்கின்றது - என்றுள்ளது.

## முதலமைச்சர் ஸ்டாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களுக்கும் தமிழக முதலமைச்சரின் ஆட்சிக்காலம் பல்வேறு வழிகளிலும் ஆதாரமாக அமையும் என்பதிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்து நீண்ட காலம் பெரும் சிரமங்கள் மத்தியில் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நன்மை அளிக்கும் பல்வேறு திட்டங்களை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு சட்டப்பேரவை யில், 110ஆவது விதியின் கீழான அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளமை மிக்க மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்துள்ளது. இதற்காக தமிழக முதலமைச்சருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தருவது உட்பட பல்வேறு திட்டங்களையும் சலுகைகளையும் அவர்களுக்குத் தமிழக முதலமைச்சர் வழங்க இருக்கின்றார். அத்துடன், இலங்கைத் தமிழர் அகதி முகாம் என்பது இனி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என அழைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் அறிவித்துள்ளமை இலங்கை தமிழ் மக்களின் பால் அவர் கொண்டுள்ள பாசம், அரவணைப்பு ஆகியவற்றைக் காட்டுகின்றது. அத்துடன், முதலமைச்சரின் இந்த அறிவிப்பு உங்களுக்கு நாங்கள் இருக்கின்றோம் என்ற ஒரு செய்தியைச் சொல்லுவதாக அமைவதாகவும் நான் உணர்கின்றேன்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிலையான ஒரு தீர்வைக் காண்பதற்கு எதிர்வரும் காலங்களில் தமிழக முதலமைச்சர் காத்திரமான பல நடவடிக்கைகளை எடுப்பார் என்ற நம்பிக்கை இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாகைளை வென்றெடுப்பதற்கான ஆய்வுகள், உபாயங்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு தமிழ் நாட்டின் புத்திஜீவிகள், கல்விமான்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோரைக் கொண்ட கட்சிசாரா சிந்தனை மையம் ஒன்றை அரசின் ஒரு நிறுவனமாக தமிழக முதலமைச்சர் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வேண்டுகோள் ஒன்றை பணிவுடன் முன்வைக்கின்றேன். அத்தகைய ஒரு நிறுவனத்தை அரசின் ஓர் அங்கமாக ஏற்படுத்தும்போது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த நிறுவனம் நீடித்து நிலைத்து தமிழ்மக்களின் அபிலாகைளை வென்றெடுப்பதற்கு பெரும் பணியை ஆற்ற முடியும் என்பது எனது நம்பிக்கை - என்றுள்ளது.

## சட்டத்துக்கு முரணாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மெய்நிகர் கருத்தரங்கில் நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் ஆகியோரின் உரை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்திற்கான சட்ட மூலத்தில் இந்த அலுவலகம் என்ன, என்ன விடயங்கள் ஆற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் முக்கிய விடயம் காணாமல்போனவர்கள் எப்படி காணாமல் போனார்கள் என்பதனை கண்டு பிடிப்பது. அதுதான் அந்த அலுவலகத்தின் முக்கியமான பணி.

அந்தச் சட்டத்தின் கீழ் ஆணையாளர்களை நியமித்து விட்டு, அவர்கள் செய்ய வேண்டிய முக்கிய பணியைச் செய்யத் தேவை இல்லை என்பது அந்தச் சட்டத்திற்கே முரணானது. நீதி அமைச்சரே இப்படி கூறியிருக்க முடியாது. அவர் சட்டத்திற்கு முரணாகவும் செயற்பட முடியாது.

இதேநேரம் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தை வைத்துத் தமிழ்க் கட்சிகள் இலாபம் பெற முயல்கின்றன எனக் கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏன் அதே தமிழ்க் கட்சியிடம் வந்து நியமனம் பெறக் கெஞ்சினார் எனத் தெரியவில்லை.

எமது மக்களின் - காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான நீதியைத் தேடுவதில் அவர்களிற்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிவதும் அடங்கும். அவர்களிற்கு என்ன நடந்தது என்ற உண்மை கண்டறியப்படாமல் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

அதாவது உண்மையை மூடி மறைத்துச் செயல்பட இந்த அலுவலகம் உருவாக்கப்படவில்லை. இதேநேரம் இழப்பீடு கொடுப்பது இவர்கள்(இந்த அலுவலகத்தின்) வேலையும் அல்ல. - என்றார்.

## மந்திகையில் 30 பேருக்கு தொற்று

பருத்தித்துறை - மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்கு வருகை தந்தவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 30 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சுமார் 40 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 30 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இது முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் 75 சதவீத நேர்மறை முடிவாகும்.

அவர்கள் 30 பேரும் மருத்துவர்களின் ஆலோசனையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டியவர்கள், இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்படவேண்டியவர்கள் மற்றும் வீடுகளில் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள் எனப் பிரித்து சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## வைத்தியர் ஜயருவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உண்மைக்கு புறம்பான தகவலை வெளியிட்டு பொதுமக்களைத் தவறாக வழிநடத்தினார் எனக் குறிப்பிட்டு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று காலை 8 மணிக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## 31ஆம் நாள் நினைவு

அமரர் திருமதி **பரமேஸ்வரி பத்மநாதன்**

(இளைப்பாறிய நெசவுப் போதனாசிரியை)

**நிரந்தர முகவரி:-கொக்குவில் கிழக்கு**
**தற்காலிக முகவரி:-புத்தூர் கிழக்கு**
**திதி:-நவமி**



அன்னை மடியில்
22.11.1937

ஆண்டவன் அடியில்
01.8.2021

*அன்பெனும் நீருற்றி*
*அறிவெனும் ஒளியேற்றி*
*என்றென்றும் நாம் உயர*
*ஏணியாகி...*

*இன்பத்தின் மலர்களால்*
*அழகிய இல்லம் அமைத்து*
*தாயாய், அன்னைக்கு*
*எம் கண்ணீர் நிறைந்த காணிக்கை.*

எங்கள் குடும்பத்தின் அமரத்துவமான பரமேஸ்வரி பத்மநாதன் அவர்களது தூய நல்ல ஆத்மாவானது அமைதியுடன் சாந்தி பெற்று இறைவனுடன் ஒன்றறக் கலக்க வேண்டி எம்மேலான இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!

**உங்கள் பிரிவால்வாடும்.**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தகவல்:—மகள்
0778456876,
0778365885

# சுற்றுலாப் பயணிகளை அழைக்க அரசு முயற்சி

இலங்கையில் கொவிட் பரவலுக்கு மத்தியில், எதிர்வரும் புதன்கிழமை முதல் இந்தியாவிலிருந்து சுற்றுலாப்பயணிகளை அழைப்பதற்கான முடிவைத் தொடர்ந்து, இஸ்ரேலிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளை அழைக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலுடன் சேர்ந்து, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அழைக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் நவம்பரில் பிரான்ஸிலிருந்து சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இஸ்ரேலில் தற்போது உலகின் மிகக்கூடிய நாளாந்த கொவிட் தொற்றுக்கள் பதிவாகி வருகின்றன.

அங்கு நாள் ஒன்றுக்குச் சராசரியாக 7 ஆயிரத்து 500 உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுக்கள் பதிவாகி வருகின்றன. இதற்கிடையில், எதிர்வரும் புதன்கிழமை முதல் இந்தியாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளைப் பறக்கச் செய்வதற்கான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

சென்னை, மும்பை மற்றும் பெங்களூர் உள்ளிட்ட ஏழு இடங்களிலிருந்து இந்தியச் சுற்றுலாப் பயணிகள் வரவுள்ளனர் என இலங்கையின் சுற்றுலா அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதுடெல்லியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் வரவழைக்கப்படுவார்கள். வாரத்துக்கு நான்கு விமானங்கள் சென்னைக்கும், மூன்று விமானங்களை மும்பைக்கும் ஒரு விமானத்தைப் பெங்களூருக்கும் இயக்க பேச்சு நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வரும் இந்தியச் சுற்றுலாப் பயணிகள், பி.சி.ஆர். சோதனையில் எதிர்மறை அறிக்கையைப் பெற்றால், அவர்கள் வனவிலங்கு பூங்காக்கள், பாரம்பரிய தளங்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்களுக்குப் பயணக் குழுவின் கீழ் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொவிட் சடலங்கைை எரியூட்ட இனி கட்டணம் அறவிடப்படாது

## வவுனியா நகரபிதா கௌதமன் தெரிவிப்பு

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடலத்தை எரியூட்டுவதற்கு இனி கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது என வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த அவர் -

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் வவுனியா நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பூந்தோட்டம் மின் மயானத்தில் எரியூட்டப்பட்டு வருகின்றன.

எனினும் குறித்த எரியூட்டல் செயற்பாட்டுக்கு இதுவரை கட்டணம் அறவிடப்பட்டு வந்த நிலையில், இனிவரும் காலங்களில் கொவிட் தொற்றால் உயிரிழக்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களின் சடலங்களை எரியூட்டுவதற்குப் பணம் அறவிடப்படமாட்டாது எனவும் ஏனைய சடலங்களை எரியூட்டுவதற்கு 7 ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

வறுமை நிலையை உறுதிப்படுத்தும் விதமாகக் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர்களின் உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள் எமக்கு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அந்த சடலங்களைக் கட்டணம் இல்லாமல் எரியூட்டுவதற்கான அனுமதியை மாத்திரம் நாம் வழங்குவோம்.

தற்போது கொவிட் இறப்புகள் அதிகரித்துள்ள நிலையில் இறந்த உடல்களை எரிப்பதற்கு சில மணி நேரம் தேவைப்படுவதாலும், ஓர் உடலை எரித்து இரண்டாவது உடலை எரிப்பதற்கு இடையில் வெப்பம் தணியவிட ஒரு சில மணிநேரம் தேவையாக இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஓமானில் மனித கடத்தல் சம்பவங்களில் மூளையாக செற்பட்ட இலங்கைப் பெண்!

ஓமானில் உள்ள இலங்கைப்பெண் ஒருவர், பாரிய மனித கடத்தல் சம்பவங்களில் தொடர்புடையவர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இந்திய உத்தர பிரதேசத்தில் உள்ள பொலிஸார், பல நாடுகளில் பரவியிருக்கும் ஒரு, பாரிய மனித கடத்தல் தொடர்பைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்மூலம், ஓமான், கட்டார் போன்ற வளைகுடா நாடுகளில் நல்ல வேதனத்துடன் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி 24 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் குறிவைக்கப்பட்டுள்ளனர் என்று பிரஸ் டிரஸ்ட் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லர், இந்தியாவின் மற்ற பகுதிகளான பஞ்சாப், கோவா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிலிருந்து சென்றவர்கள்.

அதேநேரம் இலங்கை, நேபாளம், பங்காளதேஷ் , பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளிலிருந்தும் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் நோக்கத்தை விரிவுபடுத்தியபோது, இந்த விடயம் மனிதக் கடத்தல் தொடர்பானது என்பதை அதிகாரிகள் புரிந்துகொண்டனர் எனக் கான்பூர் பொலிஸ் ஆணையாளர் ஆசிம் அருண் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களில், பாதிக்கப்பட்ட கான்பூரைச் சேர்ந்த ஆறு பெண்கள், பஞ்சாப் மற்றும் சென்னையைச் சேர்ந்த இருவர், கோவா மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த தலா ஒரு பெண் ஆகியோர், இந்திய வெளியுறவு அமைச்சின் உதவியுடன் பாதுகாப்பாக நாடு திரும்பினர் என்று அந்த பொலிஸ் அதிகாரி பி.டி.ஐயிடம் கூறியுள்ளார்.

ஓமானில் வசிக்கும் இலங்கை வம்சாவளிபெண்ணான ஆயிஷா என்பவர், வெளிநாடுகளின் முழு தொடர்புகளையும் கையாள்கின்றார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் பெங்களூரைத் தளமாகக் கொண்ட இந்தியாவின் முக்கிய முகவர்கள், பெண்களை, 'சுற்றுலா விசாவில்' வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. சிவனின் நெற்றிக்கண்ணில் உதித்த அக்கினிப் பொறிகள் ஆறு பாலகர்களாக உருப்பெற்ற இடம் எது?**

.................................................................

**2. முருப்பெருமானின் இரு சக்திகளும் எவை?**

.................................................................

**3. வள்ளி நாச்சியாரின் தகப்பன் பெயர் என்ன?**

.................................................................

**4. பிரம்மனின் ஐந்தாவது தலையைக் கொய்தவர் யார்?**

.................................................................

**5. கந்தபுராணத்தில் முருகனுடன் பொருதிய சூரபன்மனின் மகன் யார்?**

.................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 10.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

18

**பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-**

1. முழுப் பெயர் : --------------------------------------------------
2. பிறந்த திகதி : --------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : --------------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------------------
5. முகவரி : -------------------------------------------------------

...........................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# ஆபத்தான நிலையில் சங்குப்பிட்டி பாலம்!

## மக்கள் குற்றச்சாட்டு





கிளிநொச்சி - சங்குப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள பாலம் ஆபத்தான நிலை நோக்கி நகர்கின்றதா என மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தையும் கிளிநொச்சியையும் இணைக்கும் குறித்த பாலம் கடந்த 16.01.2011 ஆம் திகதியன்று அப்போதைய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

அதாவது, பாரிய நிதி செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாலம், தற்பொழுது சேதமடைந்து வருவதை அவதானிக்க முடிவதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், பாலம் அமைந்துள்ள பகுதியில் காணப்படும் கொங்கிறீட்டிலான பகுதிகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளமையுடன், பாலம் துருப்பிடித்து சிதைவுகள் ஏற்பட்டு வருகின்றமையையும் அவதானிக்க முடிகின்றதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை பாலத்தை தாங்கும் ஆணிகள், நட்டுகள் மற்றும் பாலத்தின் முக்கிய பகுதிகள், துருப்பிடித்து சிதைவடைகின்றமையையும் அவதானிக்க முடிவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப்பாலத்தின் வடக்கு பக்கமாக பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு பகுதிகள் சிலவும் காணாமல் போயுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஆரம்பத்தில் வருடம் தோறும் பாலத்தைப் பராமரித்து வந்ததாகவும் தற்பொழுது பாலம் பராமரிக்கப்படுவதில்லை எனவும் மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு பாரிய நிதி செலவில் அமைக்கப்பட்ட பாலத்தை உரிய முறையில் பாதுகாக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களின் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்தி உடன் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொண்டு, பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பாலத்தை பாதுகாக்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# சர்வதேச நாணய நிதியத்தின் வளங்களை பயன்படுத்துங்கள்!

## அமெரிக்கா வலியுறுத்து



இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள சர்வதேச நாணய நிதியத்தை கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

உறுதியான பொருளாதார அடித்தளத்தை உருவாக்கும் மாற்றங்களில் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அண்மையில் நிதியமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பில் முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஆபத்து தொடர்பாகவும் விவாதித்தேன் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் இலங்கையின் பொருளாதாரம் பற்றிய கவலை தொடர்பாகவும் குறிப்பாக நாட்டின் பொருளாதாரம் தற்போது சிறந்த ஆரோக்கிய நிலையில் இல்லை என்பதை சுட்டிக்காட்டினேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய வளங்களைப் பயன்படுத்துவதே இதற்கான தீர்வு என தாம் நம்புகிறார் எனவும் அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

# வேடுவ சமூகத்தில் பலருக்கு கொரோனாத் தொற்று உறுதி

வேடுவ தலைவர் உருவாரிகே வண்ணிலா அதோவின் மனைவி மற்றும் தம்பனையில் உள்ள வேடுவ சமூகத்தில் உள்ள பலருக்கு கொவிட் வைரஸ் தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வேடுவ தலைவர் உருவாரிகே வண்ணிலா அதோ கூறியுள்ளார்.

தம்பனை பகுதியில் வேடுவ சமூகத்தினர் மத்தியில் நடத்தப்பட்ட விரைவான அன்டிஜன் சோதனைகளில் 44 பேருக்கு தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

# எழுபது லட்சத்துக்கும் மேற்பட்டோர் இரு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்

## சுகாதார அமைச்சர் தகவல்

இலங்கையில் இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளையும் பெற்றவர்களின் எண்ணிக்கை 70 லட்சத்தைக் கடந்துள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடுப்பகுதிக்குள் நாட்டின் மொத்த சனத்தொகையில் 60 சதவீதமானோருக்கு தடுப்பூசியை செலுத்தும் இலக்கை அடைய முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பட்டினிச் சாவை நோக்கி மக்கள்!

## ரோஹினி எம்.பி. ஆதங்கம்

கொழும்பு, ஒக. 31

அத்தியாவசியப் பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தூங்கிக் கொண்டிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்கள் தாம் விரும்பிய விலைக்குப் பொருள்களை விற்பனை செய்வார்களாயின் அரசாங்கமும் அமைச்சரவையும் எதற்கு என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், நாட்டில் இதே நிலைமை தொடருமாயின் கொவிட் தொற்றால் மாத்திரமன்றி மக்கள் பட்டினியால் சாகும் நிலைமையும் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

தற்போது ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு விலைகளில் சீனி விற்பனை செய்யப்படுவது எவ்வாறு? வரிக்குறைப்பின்போது இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் விலை எதற்காக சரமாரியாக அதிகரிக்கப்படுகிறது? வரி சலுகையின் மூலம் நுகர்வோருக்கு நன்மை கிடைத்ததா?

நாட்டில் இவ்வாறான நிலைமை காணப்படுகின்ற போது நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை நித்திரையிலுள்ளது.

வர்த்தகர்கள் தாம் விரும்பிய விலைக்குப் பொருள்களை விற்பனை செய்வார்களாயின் அரசாங்கமும் அமைச்சரவையும் எதற்கு? நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை எதற்கு?

இவ்வாறு பொருள்களின் விலை அதிகரிக்கப்படுவது ஜனாதிபதிக்கும் தெரியாது என்று கூறுகின்றனர். தற்போது அரசாங்கமும் நிதி அமைச்சும் அதன் சகாக்களுக்கு வரிச் சலுகையை வழங்கும் தானசாலைகளாகவே உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தீவிர சிகிச்சைப் பிரிவில் சிறுவர்கள் புதிய நோய் அறிகுறிகளுடன் சேர்ப்பு

இலங்கையில் இதுவரையில் 'பல அமைப்பு அழற்சி நோய்க்குறி' என்று அழைக்கப்படும் கொவிட் நோய்க்கு பிந்திய நோய்க்குறியால் சுமார் 34 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அத்தகைய நோய்க்குறியுள்ள ஐந்து சிறுவர்கள், கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவின் பொறுப்பாளர் வைத்தியர் நளின் கித்துல்வத்த தெரிவித்துள்ளார்.

குறித்த நோய்க்குறியால் பாதிக்கப்பட்ட 34 பேரில் 21 பேர் சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் பதிவாகியுள்ளனர்.ஆறு பேர் கராப்பிட்டிய வைத்தியசாலையிலும், நான்கு பேர் கண்டி வைத்தியசாலையிலும் பதிவாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம், தியத்தலாவ, குருநாகல் மற்றும் பதுளை ஆகிய பகுதிகளுக்கும் இந்த நோய் இப்போது பரவியுள்ளது என்று வைத்தியர் கூறியுள்ளார்.

எந்த ஒரு கொவிட் மாறுபாட்டாலும் பாதிக்கப்பட்ட, சிறுவர்கள், கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்த இரண்டு முதல் ஆறு வாரங்களுக்குப் பிறகு இந்த பல அமைப்பு அழற்சி நோய்க்குறியால் பாதிக்கப்படலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோய்க்குறியால் பாதிக்கப்பட்ட, சிறுவர்களில் இரண்டு சதவிகிதம் இறக்க நேரிடும் என்று கூறிய அவர், சரியான நேரத்தில் வைத்தியசாலைக்கு அழைத்து வந்தால், குணப்படுத்த முடியும் என்றும் கூறியுள்ளார்.

சிறுவர்களுக்கு காய்ச்சல், வயிற்று வலி, சோர்வு, வாந்தி, வயிற்றுப்போக்கு, இரத்தக் கசிவு, தோல் சொறி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும். இது குணப்படுத்தக்கூடிய நோய் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த புதிய நோய்க்குறி இப்போது பெரியவர்களிடமும் பதிவாகியுள்ளது, 40 அகவைக்குட்பட்ட இருவர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் இந்த நோயால் உயிரிழந்துள்ளனர்.

எனவே இந்த நோய்க்குறி இலங்கையில் பெரியவர்களிடையேயும் பரவுகிறது என்று தாம் சந்தேகிப்பதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலை தீவிர சிகிச்சை பிரிவின் பொறுப்பாளர் வைத்தியர் நளின் கித்துல்வத்த தெரிவித்துள்ளார்.

# கர்ப்பிணித் தாய்மாரின் எதிர்ப்பினால் நுவரெலியாவில் தடுப்பூசி வழங்கல்

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான கொரோனா முதலாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது முதலாவது டோஸ் ஏற்றிக்கொள்ள நுவரெலியா பொதுச் சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்ட தோட்டப்பகுதிகள் மற்றும் கிராம பகுதிகளில் இருந்து கர்ப்பிணித் தாய்மார்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு வரவழைக்கப்பட்ட 400 இற்கும் அதிகமான கர்ப்பிணித் தாய்மார்கள், காலநிலை சீர்கேடையும் பொருட்படுத்தாது வருகை தந்திருந்தனர். இருப்பினும், வருகை தந்த தாய்மார்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தடுப்பூசி வழங்கப்பட மாட்டாது என பொதுச் சுகாதார வைத்திய பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து கோபமடைந்த கர்ப்பிணித் தாய்மார்கள், சுகாதாரக் காரியாலயத்துக்கு முன் குவிந்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர். இதன்பின், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் நடவடிக்கையை மேற்கொண்டு, கையிருப்பில் காணப்படும் தடுப்பூசிகளை வழங்குவதாக தெரிவித்தமையை அடுத்து அங்கு நிலவிய பதற்றம் தணிந்தது.

பின்னர், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமையுடன், வீடுகளுக்கு திரும்பி சென்றோரும் வருகை தந்து தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டனர்.

இதன்போது, நானுஓயா, ரதல்ல, கெல்சி, டெஸ்போட், கந்தப்பளை ஆகிய இன்னும் பல தோட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் இருந்து கர்ப்பிணித் தாய்மார்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2021 இல் வெளியிடப்பெற்றது.